REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2024 மார்ச் 30 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 78 | Saturday 30, March, 2024 | 11 பக்கங்கள் | 50/-


## ஹைபிரஷர் காற்று குழாயை ஆசனவாய்க்குள் அழுத்தியதால் குடல் வெடித்து இளைஞன் பலி

சபுகஸ்கந்த மாபிம பகுதியிலுள்ள தனியார் சமையல் எரிவாயு நிறுவனத்தின் பராமரிப்பு பிரிவில் பணிபுரியும் ஊழியர் ஒருவரின் ஆசனவாய்க்குள் ஹை பிரஷர் காற்றுக் குழாயை பிடித்து அழுத்தியதன் காரணமாக அந்த ஊழியர் குடல் வெடித்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் அந்த நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்கள் இருவர் சப்புகஸ்கந்த பொலிஸாரால் கைது 06

### இணையவழி சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## அறிக்கையிடும் புதிய அணுகுமுறை ஜனாதிபதி தலைமையில் அறிமுகம்

### மகளிர், சிறுவர் பாதுகாப்புக்கான சட்டம் விரைவில்



இணையத்தில் பதிவேற்றப்படும் சிறுவர்களின் ஆபாச புகைப்படங்கள், ஆபாசமான காணொளிகளை உடனடியாக நீக்குவதற்கான இணையவழி முறைமை நேற்று முன்தினம் (28) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அல்லது சிறுவர்கள் சிக்கிக்கொள்ளக்கூடிய இணையப் பக்கங்கள், புகைப்படங்கள், காணொளிகள் உள்ளிட்டவைகளால் சிறுவர்கள் பெருமளவில் சைபர் வலையமைப்புக்குள் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

உலகின் முன்னணி இணைய சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான ஐக்கிய இராச்சியத்தின் Internet 06

### ஞானசார தேரருக்கு திடீர் நெஞ்சுவலி

## வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதி



நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப்பட்ட கலகொட அத்தே ஞானசார தேரருக்கு திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி மற்றும் வயிற்று வலி காரணமாக நேற்று (29) வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் 'R' வார்டுக்கு கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் அனுப்பப்பட்டார். இதன்போதே அவருக்கு இவ்வாறு நெஞ்சுவலி மற்றும் வயிற்று வலி ஏற்பட்டதால் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய பரிசோதனையின் பின்னரே அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிறைச்சாலை வைத்தியசாலையின் 04ஆவது வார்டில் அனு 06

### பிரதமர் தினேஷ் - ஷங்ஹாய் நகரபிதா சந்திப்பு

## ஷங்ஹாய்–கொழும்பு சகோதர நகர உறவுகளை வலுப்படுத்த இணக்கம்



சீனாவின் ஷாங்ஹாய் மற்றும் கொழும்பு சகோதர நகர உறவுகளில் வலுவான தொடர்பை ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று (29) சீனாவின் ஷங்ஹாய் நகரில் ஷங்ஹாய் நகரபிதா கோங் செங்குடன் சந்தித்து நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டார். 06

### பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு

# ஆசிரியர் உதவியாளராக 2,535 பேர் நியமனம்

### சில வாரங்களில் விசேட வர்த்தமானி வெளியீடு



### மே மாதத்துக்குள் சேவையில் இணைப்பு

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான 2,535 ஆசிரியர் உதவியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த சில வாரங்களுக்குள் வெளியிடப்படவுள்ளதாக, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்வரும் வரும் மே மாதத்துக்குள் ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்து, அவர்களுக்கு அடிப்படை பயிற்சியளித்த பின்னர் பாடசாலைகளுக்கு அனுப்ப எதிர்பார்க்கப்படுவதாகவும், அமைச்சர் சுசில் தெரிவித்தார்.

### மத்திய, ஊவா மாகாணங்களில் 500 பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனம்

நிலையான தீர்வுகளை வழங்குவது சவாலாக இருக்கும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான மாற்றுத் தீர்வுகளினூடாக கல்வி முறையை தொடர்வதே தமது எதிர்பார்ப்பென்றும் தெரிவித்த கல்வி அமைச்சர், பெருந்தோட்டப் பாடசாலைகளில் இன்னமும் பாரிய ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

கல்வியியல் கல்லூரிகளுக்கு தகுதி பெறும் மாணவர்கள் மிகக் குறைவு எனவும் பட்டதாரிகள் ஒரு சிலரே 06

### 35ஆவது 'சரசவிய' திரைப்பட விருது விழா



2019 சிறந்த நடிகை சமாதி லக்சிறி | 2020 சிறந்த நடிகர் குமார திரிமாதுர | 2020 சிறந்த நடிகை நீடா பெர்னாண்டோ | 2019 சிறந்த நடிகர் பிமல் ஜெயக்கொடி

35ஆவது சரசவிய திரைப்பட விருது வழங்கும் விழா நேற்று முனதினம் (28) மாலை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. 2019 - 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகர் மற்றும் நடிகைக்கான விருதுகளை வென்ற சமாதி லக்சிறி, குமார திரிமாதுர, நீடா பெர்னாண்டோ மற்றும் பிமல் ஜயக்கொடி ஆகியோரை படங்களில் காணலாம். 2019ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத் தயாரிப்புக்கான விருது 'தெக்கலா புருது கெனெக்' திரைப்படத்துக்கு மொஹமட் அடம்லிக்கும், 2020ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத் தயாரிப்புக்காக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கும் விருதுகள் வழங்கப்பட்டதை படங்களில் காணலாம்.லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், 'சரசவிய' திரைப்பட சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி நுவன் நயனஜித் குமார, அனுசரணை வழங்கும் யுனிலீவர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷமாரா சில்வா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள்: நிஸ்ஸங்க விஜேரத்ன, மாலன் கருணாரத்ன)



2019 சிறந்த திரைப்படம் 'தெக்கலா புருது கெனெக்'



2020 சிறந்த திரைப்படம் 'த நியூஸ் பேப்பர்'

## யாழ். மருத்துவ கழிவு எரியூட்டியை உரிய முறையில் பராமரிப்பது அவசியம்

### அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டியை உரிய முறையில் பராமரித்து உச்சபட்ச நன்மையடைய வேண்டுமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலைக்குரிய எரியூட்டியை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று (29) நடைபெற்றது. இதில் உரையாற்றிய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நி க ழ் வி ல் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், "யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை 06

## பாராளுமன்றம் ஏப்ரல் மாதம் 01ஆம், 02ஆம் திகதிகளில் கூடும்



பாராளுமன்றத்தை எதிர்வரும் ஏப்ரல் 01ஆம் மற்றும் 02ஆம் திகதிகளில் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக, பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவலர்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஏப்ரல் 01ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், காலை 9.30 மணி முதல் 06

### உயிர்த்த ஞாயிறு தினம் நாளை

## 24 மணி நேரமும் 6,837 பொலிஸார் கடமையில்



உயிர்த்த ஞாயிறு தினத்தையிட்டு பொலிஸார் விசேட சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெறும் விசேட ஆராதனையில் கலந்துகொள்ளும் மக்களின் பாதுகாப்புக் கருதி 6,837 பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நாளை (31) வரை 24 மணிநேரமும் பொலிஸார் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும், பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ மேலும் கூறினார்.



03 கல்வி மறுசீரமைப்பின் கீழ் பாடசாலை தரப்படுத்தல் விரைவில் நடைமுறைக்கு



03 பூமியின் சுழற்சி வேகத்தின் அதிகரிப்பால் நேர மாற்றம்



03 'யுக்திய' சுற்றிவளைப்பில் 186 சந்தேக நபர்கள் கைது

## போதைப்பொருள், பாதாள குழுவை ஒழிக்கும்வரை 'யுக்திய' தொடரும்



நாட்டில் போதைப்பொருள் மோசடி மற்றும் பாதாள குழு செயற்பாடுகள் முற்றாக ஒழிக்கப்படும்வரை 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடருமென, பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

காலிக்கு நேற்று கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட அவர், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே, இவ்வாறு கூறினார். இது தொடர்பாக பொலிஸ் மாஅதிபர் மேலும் தெரிவித்த போது, "இந்த நாட்டில் போதைப்பொருள் மோசடி மற்றும் 06

### 2023 ஆண்டுடன் ஒப்பிடுகையில்

## 2024 முதல் 03 மாதங்களுக்குள் HIV தொற்றாளர்கள் அதிகரிப்பு





எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அதிகரித்துள்ளதாக, இலங்கை பாலியல் நோய்கள், எச்.ஐ.வி. தொற்று தடுப்பு மற்றும் சமூக சுகாதார நிபுணரும் மருத்துவருமான ஜானகி விதானபத்திரண தெரிவித்தார்.

20 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட பாலுறவில் ஈடுபடுபவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## பணம் இல்லாததால் மக்களவை தேர்தலில் போட்டியிடவில்லை

### இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்



பணம் இல்லாததால் எதிர்வரும் மக்களவை தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென, இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை தமிழ்நாடு அல்லது ஆந்திர பிரதேசத்தில் ஏதாவதொரு இடத்தில் மக்களவை தேர்தலில் போட்டியிடுமாறு பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி. நட்டா வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும் தேர்தலில் போட்டியிட தேவையான பணம் தன்னிடம் இல்லாததால், அதனை மறுத்துவிட்டதாகவும், அவர் 06

### 500 ரூபா இலஞ்சம் பெற்ற

## பொலிஸ் சார்ஜன்டுக்கு 04 வருட சிறைத்தண்டனை



முச்சக்கரவண்டி சாரதி ஒருவரிடம் 500 ரூபாவை இலஞ்சமாக பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் நான்கு வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக போக்குவரத்து பிரதி பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, அதன் பின்னர் மேற்படி பொலிஸ் 06





கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில், பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் கடந்த புதன்கிழமை இரவு இஃப்தார் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது, மௌலவி இனாம் இன்ஷாப் இஸ்லாமிய மத அனுஷ்டானங்களை மேற் கொண்டிருந்தார். நிகழ்வில் விஷேட அதிதியாக சமூக சேவையாளர் கே.எம்.ஜே.பஷீர் கலந்துகொண்டார். சாயி நிலையத்தின் சார்பில் அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்: எஸ்.ராமதாஸ்)




மஸ்ஜிதுல் பத்ரீயீன் ஜும்ஆ மஸ்ஜித், நிதியமைச்சின் கீழ் உள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த ரமழான் விசேட இஃப்தார் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது பிரதம விருந்தினராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் நாவல ஜும்மா பள்ளிவாசல் சபை தலைவர் மௌலவி மொகமட் ஹனிபா, பௌத்த மதகுரு கலஹம தம்மரன்சி நாயக்க தேரர், சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, செயிட் ஹசன் மௌலானா, அருட்தந்தை நிஷான் குரே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கற்பிட்டியில் கடல் அட்டைகளுடன் பீடி இலைகள் கைப்பற்றல்

**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி கண்டக்குழி, தங்கெல பகுதியில் வைத்து பெருந்தொகையான பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகள் (28) கற்பிட்டி பொலிஸாரின் சுற்றி வளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டக்குழி கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட பீடி இலைகள் 61 உறைகளும் மற்றும் கடல் அட்டைகள் 06 உறைகளும் கண்டக்குழி கடற்கரையிலிருந்து வெளி ஊருக்கு கொண்டு செல்லும் வழியில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.டப்யூ.எஸ். எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர்களான உபுல், பண்டார வண்ணிநாயக்க ஆகியோரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது இக்கடத்தல் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட குளிரூட்டி லொறியும் வாகனத்தின் சாரதி புத்தளத்தைச் சேர்ந்தவரும் மற்றைய கற்பிட்டி ஜனசவிபுரயைச் சேர்ந்தவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகளின் பெறுமதி சுமார் 3.5 கோடி எனவும் மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் இன நல்லிணக்கத்திற்கான இப்தார்





**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)**

கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் இஸ்லாமிய மஜ்லிஸின் வழிகாட்டலில் இன நல்லிணக்கத்திற்கான வருடாந்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு கல்லூரியின் ஸ்போர்ட்ஸ் கொம்பி'லெக்ஸ் மண்டபத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கல்லூரியில் கல்வி பயிலும் க.பொ.த.உயர்தர 2025 மாணவர் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது. கல்லூரி அதிபர் சம்பத் வேரக்கொட தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி பொறுப்பாளர் ராம்திர், பௌத்த மத அசதி தேரர், பிரகாஷ் சர்மா குருக்கள், மௌலவி ரி.டி.மாஹிர் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்வி பயிலும் மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் இன, மத பேதமின்றி அனைவரும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.






உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் , சமாதான நீதவானுமாகிய கலாபூஷணம் மு.சொக்கலிங்கசாமியின் அனுசரணையில் பு/ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம், பு/உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், பு/ஸ்ரீ கிருஷ்ணா தமிழ் ஆரம்ப பாடசாலை, பு/ஒற்றப்பனை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் க.பொ.த.(உ/த), க .பொ.த(சா.த) மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுப் பாடசாலைக்குப் புகழ் சேர்த்த மாணவர்களை கௌரவித்து சான்றிதழ்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் பணப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு பு/ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் வியாழக்கிழமை (28) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வ.சிவலோகதாசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்ததோடு , பலர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தினகரன் நாளிதழின் 92 ஆண்டு நிறைவு விழாவில் தினகரன் பயணத்திற்குப் பங்களிப்பாற்றிய சமூகவியலாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் தொழிலதிபர் டப்ளியூ. எம். நாஜிம் கௌரவிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.




கொழும்பு 12. றிபாய் தங்கள் ஒழுங்கையில் அமைந்துள்ள மொஹியதீன் தகியா பள்ளிவாசலில் புனித பத்ர் தினத்தை முன்னிட்டு கலிபாதுல் உலமா கலீல் மௌலவி தலைமையில் விசேட பயான், துஆ பிரார்த்தனைகளும் இப்தார் நிகழ்வும் நடைபெற்றது. நிகழ்வில் சபீக், நவ்சாத், அன்சார், முயின், முபாரக் ஆகியோர் கலந்து கொண்டிருப்பதையும் இப்தார் நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.






கட்டாரில் இயங்கி வரும் இலங்கை பாடசாலையான அல்அஷ்பால் சர்வதேச பாடசாலையின் இப்தார் நிகழ்வு அதிபரான மொஹமட் ரிஷாவின் தலைமையில் (28) பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில், கட்டாரின் தொழிலதிபரில் ஒருவரான பர்ஹான் அல் ஷேக் அல் சயீத், கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரியான ரஷீத் எம். பியாஸ், இலங்கை முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவரான ரினோஸ் ஸாலிஹீன் மற்றும் CDF QATAR அமைப்பின் தலைவரும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். மேலும் இந்த இப்தார் நிகழ்வில் அப்பாடசாலையின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## தவக்கால சிந்தனை



# திருவிழிப்பு சனி

ஆண்டவரின் பாடுகளின் பின் வருகின்ற சனிக்கிழமை அமைதியானது. நாம் எல்லோரும் கிறிஸ்துவின் இராவுணவுப் பெருவிழா, அவரது பாடுகள், மரணம் என்கிற பெரிய வெள்ளி வழிபாடு போன்றவற்றை கடந்து சில மணித்தியாலங்கள் அமைதியாக அவருடன் காத்திருக்கின்றோம்.

இன்றிரவு பாஸ்கா திருவிழிப்பு என்கிற மாபெரும் எழுச்சி நமக்குள் காத்துக் கிடக்கிறது. அவ்வேளையில் புதிய நெருப்பு, கிறிஸ்து சாவிலிருந்து உயிர்த்து விட்டார் என்கிற பேரிகை, புதிய நம்பிக்கையாளர்களின் (சகோதர, சகோதரிகளின், குழந்தைகளின்) திருமுழுக்கு என்று வழிபாடுகள் தொடரும்.

இவற்றிற்கு முன்பதாக ஒரு நீண்ட அமைதி. அது நமக்கான ஆசீர்வாதமாகும். அடுத்து என்ன நிகழவுள்ளது என்பதற்கு முன்பதாக நமக்கு ஓர் அமைதியான நேரம், காலம் தரப்பட்டுள்ளது. நாம் அதற்காக காத்திருக்கின்றோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பானது சடுதியாக வந்துவிடாது. அதற்கான காத்திருப்பின் பிற்பாடுதான் நிகழும். கடவுள் நமது செயற்றிட்டத்திற்கு ஏற்பவல்ல, அவரது செயற்றிட்டத்திற்கு ஏற்பவே செயல்படுவார்.

புனித சனியின் அமைதியானது நினைவூட்டுவது என்னவெனில், கடவுளின் மீட்புச் செயலானது நாம் காணாத போதும், கவனியாத போதும் உறுதியாக நடைபெறுகிறது என்பதனை எடுத்துரைக்கின்றது. ஏனெனில் நமது எதிர்நோக்கு கிறிஸ்துவில் உள்ளது. அவர் கல்வாரி நிகழ்வு முடிந்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட பிற்பாடும் தனது பணியினை தொடர்கிறார்.

புனித சனியில் நமது மீட்பராகிய இயேசுகிறிஸ்து பாதாளத்தில் இறங்கி, ஆதாமையும் அவரோடு கூடவே துயில் கொண்டுள்ள அனைவரையும் தட்டியெழுப்பி 'எழுந்திருங்கள், சாவிலிருந்து வாழ்வுக்கு வாருங்கள்' என்கிற உன்னத உத்தான அழைப்பினை விடுக்கின்றார். இயேசுவின் உயிர்ப்பானது சாவின் மீது அவர் கொண்ட வெற்றியாகும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# 'யுக்திய' சுற்றிவளைப்பில் 186 சந்தேக நபர்கள் கைது



போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் போதைப்பொருள் விநியோக வலையமைப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய' சுற்றிவளைப்பின் போது பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடைய 186 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 19ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் (28) வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இச்சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய 10 சந்தேக நபர்களும் அவர்களுக்கு உதவியதாக சந்தேகிக்கப்படும் 05 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# நூற்றுக்கணக்கான இலங்கையர் ரஷ்ய இராணுவத்தில் இணைவு

அல் ஜசீரா செய்தி வெளியீடு

ரஷ்ய இராணுவத்தில் நூற்றுக்கணக்கான இலங்கையர் இணைந்துள்ளதாக, அல் ஜசீரா செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ரஷ்யாவிலுள்ள இலங்கையர்களே தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அல் ஜசீரா செய்தி நிறுவனம், ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ள இலங்கையர் ஒருவர் மாதம் மூவாயிரம் அமெரிக்க டொலரை (இலங்கை ரூபாவில் 9 இலட்சம்) சம்பளமாக பெறுவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் பலர், தற்போது ரஷ்ய இராணுவத்தில் இணைய முயற்சி செய்வதுடன், தமது குடும்பத்தினரின் வளமான வாழ்க்கைக்காக உக்ரைன் இராணுவத்தினரின் தாக்குதலைக் கூட அவர்கள் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், அல் ஜசீரா தெரிவித்துள்ளது.

## ரமழான் சிந்தனை

# நல்லெண்ணம் வளர்ப்போம்

மனிதனின் மனதில் தோன்றும் எண்ணங்கள் இரு வகைப்படும். அவற்றில் பிறரின் உடலுக்கோ, உள்ளத்திற்கோ துன்பம் விளைக்காமல் இருந்தால் அது நல்ல எண்ணங்களாக அமையும். துன்பம் விளைவித்தால் அது தீய எண்ணங்கள் இருக்கும். அதனால் நம் மனதில் ஒருவரைப் பற்றியோ அல்லது ஒரு சமூகத்தைப் பற்றியோ தீய எண்ணங்கள் வளர அனுமதிக்கலாகாது. அது எம்மை பாவங்களின் பக்கம் இட்டுச் செல்லக்கூடியதாக அமைந்துவிடும். இது குறித்து அல்குர்ஆன், 'முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன். மிக்க கிருபை செய்பவன்' என்று குறிப்பிட்டுள்ளது. அதேநேரம் இறைத்தூதர்(ஸல்) அவர்கள், '(பிறர் மீது) கெட்ட எண்ணம் கொள்வது குறித்து உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், கெட்ட எண்ணம் தான் பேச்சுகளிலேயே மிகவும் பொய்யானதாகும். (மற்றவர்களின் குற்றங் குறைகளை) துருவித் துருவி ஆராயாதீர்கள். ஒட்டுக்கேட்காதீர்கள். ஒருவருக்கொருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். (அல்லாஹ்வின் அடியார்களே!) சகோதரர்களாய் இருங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி) எனவே, எம்மிடம் காணப்படுகின்ற தீய எண்ணங்களைக் களைந்து, நல்லெண்ணங்களை வளர்த்துக் கொள்ள இந்த உயரிய மாதத்தில் உறுதி கொள்வோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

கல்வி மறுசீரமைப்பின் கீழ்

# பாடசாலை தரப்படுத்தல் விரைவில் நடைமுறைக்கு



கல்வி மறுசீரமைப்புக்கான அடிப்படை நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி நிர்வாகத்தினூடாக மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் 01 முதல் 05 வரையான வகுப்புகளை கொண்ட பாடசாலைகள் ஆரம்பப் பாடசாலைகளாக வகைப்படுத்தப்படுமென்றார்.

இந்நிலையில் 06 முதல் 10 வரையான வகுப்புகளை கொண்ட பாடசாலைகள் கனிஷ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளாகவும் 10 முதல் 13 வரையான வகுப்புகளை கொண்ட பாடசாலைகள் சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளாகவும் வகைப்படுத்தப்படுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பூமியின் சுழற்சி வேகத்தின் அதிகரிப்பால் நேர மாற்றம்



பூமியில் நேரத்தில் மாற்றம் ஏற்படவுள்ளதாகவும் இதற்கமைய பூமியின் நேரம் நாளொன்றுக்கு ஒரு நொடி வீதம் குறைவடையுமெனவும் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

பூமி வெப்பமடைவதுடன், துருவப் பனிக்கட்டிகளும் வேகமாக உருகுகின்றன. திடமான பனிக்கட்டி உருகுவதன் காரணமாக பூமியின் மையப்பகுதியில் ஏற்படும் மாற்றங்களால் பூமியின் சுழற்சி வேகம் அதிகரித்து, அதன் மூலம் பூமியின் நேரத்தில் மாற்றம் ஏற்படுமெனவும், விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் ஒரு வினாடி மிகவும் குறுகிய காலப்பகுதியான போதிலும், அது கணினி பயன்பாட்டில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துமென்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ள இந்த விடயம் தொடர்பாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## மார்ச் மாதம் 0.9 வீதமாக பணவீக்கம் குறைவு



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெணுக்கமைய பணவீக்கம் மார்ச் மாதத்தில் 0.9 சதவீதமாக குறைந்துள்ளது.

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவலுக்கமைய, இந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் பதிவான 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பணவீக்கம் 5 சதவீதமாக குறைந்துள்ளது.

இதேவேளை 3.5 சதவீதமாக இருந்த பெப்ரவரி மாத பணவீக்கம், மார்ச் மாதத்தில் 3.8 சதவீதமாக சிறியளவில் அதிகரித்துள்ளது.

# பேராசிரியர் சோ.சந்திரசேகரம்; 02ஆவது வருட நினைவுப் பேருரை

மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் இரண்டாவது வருட நினைவுப்பேருரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரா. சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றத் தலைவர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நினைவுப் பேருரையை 'தொலைந்த இடத்தில் தேடுவோம்' எனும் தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் சி.மௌனகுரு நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரம் எழுதிய கட்டுரைகளின் தொகுப்புகள் வெளியிடப்படவுள்ளன. இதன்போது, மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரமும் கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.அதிரதனும் இணைந்து எழுதிய மற்றுமொரு கட்டுரை தொகுப்பும் வெளியிடப்படவுள்ளது.

'இலங்கையில் கல்வியின் வரலாற்றுச் செல்நெறிகள்', 'சர்வதேசக் கல்வி முறைகளின் செல்நெறி' ஆகிய நூல் தொகுப்புகளே வெளியிடப்படவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பேருரையாளர் அறிமுகத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாநிதி க.இரகுபரன் நிகழ்த்தவுள்ளார். வரவேற்புரையை கலாநிதி அதிரதனும் நன்றியுரையை பேரா. சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்ற செயலாளர் ச.இந்திரகுமாரும் நிகழ்த்தவுள்ளனர்.

பண மோசடி சட்டத்தின் கீழ்

# 11 கோடி ரூபா பெறுமதியான சொத்து, வாகனங்கள் பறிமுதல்



சுமார் பதினொரு கோடியே மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான வாகனங்கள் உட்பட சொத்துகளை சட்டவிரோத சொத்துகள் விசாரணை பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன், பணமோசடி சட்டத்தின் 7(1) பிரிவின் கீழ் மேற்படி சொத்துகளை கைப்பற்றியுள்ளதாக கூறினார்.

இதன்போது முடக்கப்பட்ட வாகனங்கள் உள்ளிட்ட சொத்துகளையே கைப்பற்றியுள்ளதாகவும் இவற்றின் மொத்த சந்தைப் பெறுமதி 11 கோடியே 03 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமென்று தெரியவந்துள்ளதாகவும், பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

ஒருவழித்தட திருத்த வேலைகளால்

# கோட்டை முதல் வெள்ளவத்தை கரையோர ரயில் சேவை தாமதம்



கொழும்பு, கோட்டை முதல் வெள்ளவத்தை ரயில் நிலையங்களுக்கிடையில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவுள்ள பராமரிப்பு வேலை காரணமாக ரயில் சேவைகளில் சற்றுத் தாமதம் ஏற்படலாமென, ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கோட்டை மற்றும் வெள்ளவத்தை ரயில் நிலையங்களுக்கிடையிலான கரையோர ரயில் சேவை ஒரு வழித்தட சேவையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், நாளை (31) வரை இந்த நிலைமை நீடிக்குமெனவும், திணைக்களம் தெரிவித்தது.

மேற்படி ரயில் நிலையங்களுக்கிடையிலான பராமரிப்பு வேலை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய சில ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படலாமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

ஆயினும், நாளை ஞாயிற்றுக்கிழமை இரவுக்கு பின்னர் கொழும்பு, கோட்டை மற்றும் வெள்ளவத்தை ரயில் நிலையங்களுக்கிடையிலான ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்புமெனவும், ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் வெப்பமான காலநிலையால்

# ஆஸ்துமா தீவிரமடையும் வாய்ப்பு மாணவர்களுக்கே அதிகளவில் பாதிப்பு



பாடசாலை மாணவர்கள் தற்போது விளையாட்டுப் போட்டிகளுக்கு தயாராகி வருவதால் அவர்களிடையே ஆஸ்துமா நோய் பாதிப்பு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து வருவதாக, லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சிறுவர் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மாணவர்கள் வெய்யில் காலநிலைக்கு மத்தியில் பல வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இந்த நோய் அதிகரிப்புக்கு மற்றொரு காரணமெனவும், அவர் கூறினார்.

ஆகையால் பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பாக பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமெனவும், மருத்துவர் தெரிவித்தார். புகைப்பிடிக்கும் இடங்களிலிருந்து சிறுவர்களை விலக்கி வைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள அவர், சுவாச சிக்கல்கள் அதிகரிப்பை தடுக்க இது பெரிதும் உதவுமென்றார்.

மேலும் தொற்றுநோயை தடுக்க சிறுவர்களுக்கு முகக் கவசத்தை அணிவிப்பதன் மூலம் அவர்களுக்கு ஓரளவுக்கு பாதுகாப்பை வழங்க முடியுமெனவும், அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பாடசாலை மாணவர்கள் மத்தியில் தற்போது கை, கால் மற்றும் வாய் நோய்கள் அதிகரித்து வருவதையும் மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

சிவனொளிபாதமலைக்குச் சென்ற

# இந்திய இளைஞர் தவறி விழுந்து படுகாயம்; பொலிஸாரால் மீட்பு



சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற இந்திய இளைஞர் ஒருவர், அம்மலைக்குச் செல்லும் பாதையில் எஹல கனுவ பிரதேசத்தில் போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியிலிருந்து 100 மீற்றர் பாறையில் தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் தம்மால் மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞர், சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையில் மற்றுமொரு குழுவினருடன் சென்று கொண்டிருந்த போது நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிவனொளிபாத உடமலுவ பொலிஸ் நிலைய அதிகாரிகள், பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் இவ்வாறு விழுந்த இளைஞரை மீட்டு உடமலுவவுக்கு கொண்டு சென்று அவருக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் 120 வயதை தாண்டிய 55 வாக்காளர் இருப்பதாக தகவல்

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 120 வயதுக்கு மேல் 55 வாக்காளர்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ வெளியிட்ட வயது ரீதியான வாக்காளர் விவரப் பட்டியலில் 120 வயதுக்கு மேல் 55 வாக்காளர் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது

தமிழகத்தில் கடந்த ஜனவரி 22ஆம் திகதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலுக்கு அமைவாக 6.18 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில், தற்போது எண்ணிக்கை 6.23 கோடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வயது அடிப்படையிலான வாக்காளர் விவரங்களை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ளார். மார்ச் 28ஆம் திகதி நிலவரப்படி 6 கோடி 23 இலட்சத்து 33 ஆயிரத்து 925 வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் 100 வயதுக்கு மேல் 5 ஆயிரத்து 527 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 120 வயதுக்கு மேற்பட்டவர்கள் எண்ணிக்கை 55 ஆகும்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 17ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 19

### குறள் தரும் சிந்தனை

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

உயிரும் உடலும்போல் அன்பும்
செயலும் இணைந்திருப்பதே
உயர்ந்த பொருத்தமாகும்

## பொருளாதார வீழ்ச்சிக்கு மீண்டும் இடமளிக்கலாகாது!

நாட்டின் அரசியல் களத்தில் தற்போது தேர்தல் தொடர்பான பரபரப்பு உருவாகியிருக்கின்றது. கடந்த ஓரிரு மாதங்களாக இவ்வாறான பரபரப்பொன்று நிலவி வருகின்து. அரசியல்வாதிகள் மத்தியில் மாத்திரமன்றி, மக்களிடமும் இத்தகையதொரு பரபரப்பு நிலவி வருகின்றது.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் எந்தத் தேர்தல் முதலில் நடைபெறுமென்று உறுதியான அறிவிப்புகள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

எனினும் முதலில் ஜனாதிபதித் தேர்தலும், அதன் பின்னர் பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் நடைபெறுமென்றே அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் நிலவுகின்றன. அவ்வாறானால் ஜனாதிபதித் தேர்தல் இவ்வருட இறுதியிலும், பாராளுமன்றப் பொதுத்தேர்தல் அடுத்த வருடமும் நடைபெறலாமென்றே ஊகங்கள் நிலவுகின்றன.

எனவேதான் முதலில் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தவாறு பிரதான அரசியல் கட்சிகள் தற்போது பரபரப்பாக இயங்கத் தொடங்கியுள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்ற வேட்பாளர்கள் யாரென்பது குறித்து உறுதியான அறிவிப்புகள் வெளியிடப்படாத போதிலும், தேர்தல் கூட்டணி அமைப்பதிலும் மக்களின் ஆதரவு தேடுவதிலும் அரசியல் கட்சிகள் தற்போது முனைப்புக் காட்டி வருவதைக் காண முடிகின்றது.

நிலைமை இவ்வாறிருக்கையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவரென்று எதிர்பார்க்கப்படுகின்ற வேட்பாளர்கள் தொடர்பான அபிப்பிராயங்கள் தற்போது ஊடகங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் பலராலும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்விப்புலத்திலுள்ள முக்கியஸ்தர்கள் மாத்திரமன்றி, சாதாரண பொதுமக்களும் இதுதொடர்பான அபிப்பிராயங்களைப் பதிவு செய்து வருவதைக் காண முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான கருத்துகளே பொதுவெளியில் அதிகளவில் உலவுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது நாட்டின் தலைமைத்துவத்தை மீண்டும் பொறுப்பேற்பதற்குப் பொருத்தமான அரசியல் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே பலரும் விரும்புவதாக அந்த அபிப்பிராயங்களை வாசிக்கின்ற போது புரிகின்றது. வடபகுதியைச் சேர்ந்த தமிழ் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தையே தாம் விரும்புவதாகத் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமானால், தகுதி வாய்ந்த தலைமைத்துவமே முதலில் அவசியமாகின்றது. பொருளாதாரம் முன்னேற்றமடைய வேண்டுமானால் முதலில் அதற்கான வினைத்திறன்மிக்க திட்டங்கள் அவசியமாகின்றன. பொருளாதாரத் திட்டங்களில் திறமைமிக்க தலைவராக சர்வதேச ரீதியில் இனங்காணப்பட்ட தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் நாட்டில் நிலவிய பொருளாதாரச் சிக்கல்களை மக்கள் இன்னுமே மறந்துவிடவில்லை. மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு மற்றும் பெட்றோல், டீசல் போன்ற எரிபொருட்களுக்காக மக்கள் நாட்கணக்கில் இரவுபகலாக கியூவரிசையில் குவிந்து நின்ற காட்சிகள் கண்முன்னே இன்னும் நிழலாடுகின்றன.

எரிபொருள் விநியோக நிலையங்கள் மூடப்பட்டுக் கிடந்தன. ஆனாலும் எரிபொருள் கிடைக்குமென்ற நம்பிக்கையில் மக்கள் வீதியோரம் கடதாசியை விரித்து விடியவிடிய படுத்துக் கிடந்தனர். நான்கு லீற்றர் பெட்றோலைப் பெறுவதற்காக இருபத்துநான்கு மணி நேரம் காத்துக்கிடக்க வேண்டியிருந்தது.

உணவகங்களும் மூடப்பட்டுக் கிடந்தன. சமையல் எரிவாயு கிடைக்காததால் உணவகங்களில் உணவைச் சமைக்க முடியவில்லை. ஹோட்டல்களின் வருமானம் முற்றாகவே பாதிக்கப்பட்டதால் அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் பலர் முற்றாகவே வருமானம் இழந்தனர். சிறுதொழில் புரிந்த இவ்வாறான ஊழியர்கள் ஏராளமானோர் முற்றாகவே வருமானம் இழந்து போனதால், அவர்களது குடும்பங்களே பட்டினியால் வாட வேண்டியிருந்தது.

தவறான பொருளாதாரக் கொள்கைகளால் உண்டான விபரீதங்களே இவையாகும். நாட்டை ஆட்சி செய்வதென்பது ஒரு குடும்பத்தை நிர்வகிப்பதைப் போலவோ அல்லது ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதைப் போலவோ அல்ல. ஒரு நாட்டின் பொருளாதாரம் அனுபவத்தின் மூலம் மிகக்கவனமாக முன்கொண்டு செல்லப்பட வேண்டியதாகும். அதற்கு அனுபவம், ஆற்றல், திறமை, கல்வித்தரம் போன்றனவெல்லாம் அவசியமாகின்றன.


கடந்த கால தவறான பொருளாதாரக் கொள்கைகளால் நாடு அதலபாதாளத்தில் வீழ்ச்சியடைந்திருந்த வேளையில், அரசாங்கமும் ஆட்டம் கண்டது. நாட்டின் ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டியிருந்த வேளையில், நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்பதற்கு அரசியல் தலைவர்கள் எவருமே முன்வரவில்லை.

அவ்வேளையில் துணிச்சலுடன் நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்று வழிநடத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் முன்னெடுத்த சிறப்பான திட்டங்கள் காரணமாகவே எமது நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து பெருமளவில் மீண்டெழுந்துள்ளது. ஜனாதிபதியின் ஆற்றலும் திறமையும் அனுபவமுமே இதற்கான காரணங்களாகும்.

அரசியல் தலைவர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் நிறைந்தவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கணிக்கப்படுவதாலேயே, நாட்டின் தலைமைத்துவத்தை மீண்டும் அவரே பொறுப்பேற்க வேண்டுமென்ற கருத்துகள் பலதரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன.

editor.tkn@lakehouse.lk

# இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது மனிதகுலம் மீதான இறையன்பின் வெளிப்பாடு



நாளை ஈஸ்டர் திருநாள்

கிறிஸ்து உயிர்த்தார் என்பது வெறுமனே ஒரு வரலாற்றுச் செய்தி மாத்திரமல்ல, முழு மனித குலத்திற்குமான இறைவனது மாபெரும் வாக்குறுதியாகும்.

இற்றைக்கு 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பதான கிறிஸ்து இயேசுவின் பிறப்பு இருளடைந்த உலகிற்கு ஒளியேற்றியிருந்தது மட்டுமல்லாது, அவரது சிலுவைப்பாடுகளும், மரணமும்,உயிர்ப்பும் பாவத்திலே மூழ்கி நிலைவாழ்வை இழந்துபோன மனித குலத்திற்கு நிலைவாழ்வின் நிச்சயத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

கிறிஸ்து இயேசுவின் மரணமும், உயிர்ப்பும் உலக சரித்திரத்தில் இடம்பிடித்த உண்மைச் சம்பவம் மாத்திரமல்ல, முழு மனிதகுலத்தின் மீதான இறைஅன்பின் வெளிப்பாடுமாகும்.

மனிதகுலத்தின் பாவம் இறைவனோடிருந்த உறவில் பாரிய பிளவினை ஏற்படுத்தியிருந்தது மட்டுமல்லாது, முழுஉலகினையுமே இருளடைய வைத்திருந்தது. இறைமைந்தன் கிறிஸ்து பூமிக்கு மனிதனாக வந்ததன் விளைவு மனிதவாழ்வியலில் ஏற்படுத்தியிருந்த மாற்றத்தினை பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டு நற்செய்தியாளர் 'காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்துள்ளது' (மத்தேயு4:16 ) எனக் கூறியிருந்தார்.

'எவரெல்லாம் ஒளியாகிய கிறிஸ்துவை கண்டடைகின்றார்களோ, பாவமெனும் இருளகன்று அவர்களது வாழ்வு பிரகாசமடைகின்றது; ஏனெனில் 'உலகத்தில் வந்து எந்த மனிதனையும் பிரகாசிக்கச் செய்கின்ற ஒளியே அந்த மெய்யான ஒளி' என யோவான் நற்செய்தியாளர் திருவிவிலியத்தில் கிறிஸ்து இயேசுவைப் பற்றி குறிப்பிட்டிருந்தார்.

ஆண்டுகள் தோறும் அனுஷ்டிக்கப்படுகின்ற கிறிஸ்து உயிர்ப்பின் திருநாள் கிறிஸ்தவ பண்டிகை அல்லது திருச்சபைக் கலாசாரம் என்பதற்கப்பால் முழு மனிதகுலத்திற்குமே கிறிஸ்து இயேசு மூலமாக இறைவனால் திறந்து விடப்பட்ட நிலைவாழ்வுக்கான வழியென்பதை நினைவூட்டுவதாக அமைகின்றது.

உரோம ஆட்சியாளர்களினாலும், யூத சமயத் தலைவர்களினாலும் சிலுவை மரத்தில் கொலை செய்யப்பட்ட தேவமைந்தனாகிய கிறிஸ்து இயேசு கல்லறையில் வைத்துக் காவல் காக்கப்பட்டிருந்தும், அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் அதிகாலை கல்லறை வாயிலில் வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட பாரிய கல் புரட்டப்பட்டிருந்தமையும் கல்லறையுள்ளே கிறிஸ்துவின் இறந்த உடல் காணப்படாது உடலைச் சுற்றியிருந்த துணிகள் மடித்து வைக்கப்பட்டிருந்தமையும் உயிர்த்த கிறிஸ்துவின் தரிசனமும் மரித்த கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சான்றாயமைவது போல் கல்லறையின் திறப்பும் கிறிஸ்து உயிர்ப்பின் உறுதியும் மனிதகுலம் முழுவதற்குமான நிலைவாழ்வின் நிச்சயத்தினையும் தருகின்றது.

கிறிஸ்து இயேசுவை மரணத்தை ஜெயித்த இறைவனென விசுவாசித்து, அவர் மூலமாய் தம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு தந்தையாம் இறைவனுடன் ஒப்புரவானதை நினைவிற் கொண்டு, அவர் காட்டிய பாதையில் வாழ்வோர் மறுமையிலே உயிர்த்த கிறிஸ்துவுடன் நிலைவாழ்வடைவர் என்பது உறுதியாகின்றது.

ஆண்டுகள் தோறும் நினைவு கூரப்படும் கிறிஸ்து உயிர்ப்பின் நாள் இவ்வருடமும் (நாளை) நினைவு கூரப்படுகின்ற போது நிலைவாழ்வைத் தரும் கிறிஸ்து, மரணத்திலிருந்து எழுந்து நிலைவாழ்வைத் தர கல்லறையை விட்டு நம்மிடையே வந்துவிட்டார் எனும் உறுதியினால் மனமகிழ்ச்சி மேலோங்குகிறது.

கிறிஸ்து உயிர்த்தார் என்பதும் அதனை விசுவாசிப்போர் நிலை வாழ்வடைவர் என்பதும் உறுதியான நிலையில் நிலைவாழ்வின் நிச்சயத்தினைப் பெற்றோர் கிறிஸ்து எதிர்பார்க்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் சாட்சிகளாவதன் மூலம் எமக்கடுத்திருப்போரும் உயிர்த்த கிறிஸ்துவை விசுவாசித்து அவர் வழியாய் தந்தையாம் இறைவனோடு ஒப்புரவாவதன் மூலம் இறைவன் தரும் நிலைவாழ்வைப் பெற வழியேற்படும்.

அடைக்கப்பட்ட கல்லறையின் கல் புரட்டப்பட்டிருந்தமை கிறிஸ்து உயிர்ப்பை வெளிப்படுத்தியது போல, மனித உள்ளங்களிலுள்ள உயிர்த்த கிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்கு தடையாகவுள்ள மனிதநேயமற்ற பண்புகள் புரட்டப்பட்டு கிறிஸ்துவின் அன்பு உள்ளத்தில் ஊற்றெடுக்கின்ற போது உயிர்த்த கிறிஸ்துவை அறிந்து விசுவாசித்து நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள வழியேற்படும்.

இருளான உலகிற்கு ஒளியேற்ற ஒளியாம் இறைவன் உலகிற்கு வந்தார். பாவத்தில் பலியாகி நிலைவாழ்வை இழந்த மனுக்குலம் அனைத்திற்குமாய் தன்னைப் பலியாக்கி நிலைவாழ்வின் வழியினைத் திறந்தார்.

கிறிஸ்துவின் கல்லறை நாளை திறந்துள்ளது. கிறிஸ்து உயிர்ப்பை நினைவூட்டுகின்றது. எனவே திருவிவிலியத்தின் எச்சரிப்புக்கு செவிமடுப்போம். 'காலம் நிறைவேறி விட்டது, கடவுளின் அரசு நெருங்கி விட்டது, அனைவரும் மனந்திரும்பி நற்செய்தியை ஏற்றுக் கொள்ளுங்கள்' (யோவான்14:15) எனும் செய்தியை ஞாபகப்படுத்த மீண்டுமொரு கிறிஸ்து உயிர்ப்பின் நாள் நமக்கு.



குழந்தைவேலு சற்குணானந்தன்...
(அதிபர்) அக்கரைப்பற்று

## மைக்ரோ சொப்ட் உரிமையாளருக்கு மோடி வழங்கிய தூத்துக்குடி முத்துகள்!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் மைக்ரோ சொப்ட் உரிமையாளர் பில் கேட்ஸ் சந்தித்துப் பேசினார். அப்போது பிரதமர் மோடி அவருக்குத் தூத்துக்குடி முத்துகளைப் பரிசாக அளித்தார்.

இந்தியா வந்துள்ள உலக கோடீஸ்வரர்களில் ஒருவரும் மைக்ரோசொப்ட் உரிமையாளருமான பில் கேட்ஸ் டெல்லியில் உள்ள பிரதமர் இல்லத்தில் மோடியைச் சந்தித்துப் பேசினார். கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டைக் குறிப்பிட்டு பிரதமர் மோடி பேசியுள்ளார். ஜி20 உச்சி மாநாடு அனைவரையும் உள்ளடக்கி இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தூத்துக்குடி முத்துகளை மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸுக்கு பிரதமர் மோடி வழங்கி உள்ளார். மேலும் களிமண்ணால் செய்யப்பட்ட தமிழ்நாடு குதிரை பொம்மைகளையும் பிரதமர் மோடி பில் கேட்ஸுக்கு பரிசாக வழங்கினார்.

இருவருக்கும் இடையே நடந்த இந்தச் சந்திப்பு குறித்த வீடியோவும் பிரதமர் மோடியின் ட்விட்டர் பக்கத்தில் பகிரப்பட்டுள்ளது. இந்தியாவில் நடந்து வரும் டிஜிட்டல் புரட்சி குறித்தும் இருவரும் விவாதித்துள்ளனர். இந்தோனேசியாவில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டின்போது, உலகெங்கும் உள்ள பிரதிநிதிகள் நாட்டில் டிஜிட்டல் புரட்சி குறித்து ஆர்வமாக உள்ளதாகப் பிரதமர் மோடி கூறினார்.

இந்தியாவில் டிஜிட்டல் புரட்சியைப் பாராட்டிய பில் கேட்ஸ், இந்தியா தொழில்நுட்பத்தை மாற்றியமைப்பது மட்டுமல்லாமல், அதில் முன்னிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் (AI) முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து இருவரும் விவாதித்தனர். குறிப்பாக 2023 ஜி20 உச்சி மாநாடு, காசி தமிழ் சங்கமம் நிகழ்வின் போது ஏ.ஐ தொழில்நுட்பம் எப்படிப் பயன்படுத்தப்பட்டது என்பது குறித்தும் இந்தி பேச்சு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது எப்படி என்பது குறித்தும் பில் கேட்ஸிடம் பிரதமர் விளக்கினார்.

பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததால் முதல் மற்றும் இரண்டாவது தொழில் புரட்சிகளின் போது இந்தியா பின்தங்கியதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். இருப்பினும், நான்காவது தொழில்துறை புரட்சி நடக்கும் இந்த காலகட்டத்தைப் பயன்படுத்தி இந்தியா குறிப்பிடத்தக்கப் பலன்களைப் பெறும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏ.ஐ குறித்து பிரதமர் மோடியிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "ஏ.ஐ ஒரு மெஜிக் கருவி. அதனை நம்புவது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும். சோம்பேறித்தனம் காரணமாக அதைப் பயன்படுத்துவது தவறான அணுகுமுறை. ஏ.ஐ உடன் போட்டி போட்டுக் கொண்டு இருந்தால் அதுவும் நமது திறமையை அதிகரிக்க உதவும்" என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோல பில் கேட்ஸும் கூட ஏ.ஐ மக்களுக்கு ஏற்படுத்தித் தரும் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்துப் பேசினார். பில் கேட்ஸ் கூறுகையில், "ஏ.ஐ இன்னும் ஆரம்ப நாட்களில் இருக்கிறது. கடினமான பணிகளைச் செய்யும் திறன் ஏ.ஐக்கு இருக்கிறது. ஆனால், அதே நேரம் எல்லா வேலைகளையும் ஏ.ஐ இனால் செய்ய முடியும் என்று தோன்றவில்லை. ஏ.ஐ இற்கு அபரிமிதமான ஆற்றல் இருந்தபோதிலும், இன்னும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது" என்று தெரிவித்தார்.

## ரூபா 1,700 கோடி அபராதம் செலுத்துமாறு காங்கிரஸ் கட்சிக்கு அறிவித்தல்!

இந்திய காங்கிரஸ் கட்சி வருமான வரி மற்றும் அபராதம் என மொத்தம் 1,700 கோடி ரூபா செலுத்த வேண்டும் என்று வருமான வரித்துறை அதிகாரிகள் அறிவித்தல் அனுப்பி உள்ளனர்.





வருமான வரித்துறை அறிவித்தல்களை எதிர்த்துத் தாக்கல் செய்த மனுவை டெல்லி உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து இருந்தது. அந்த மனு தள்ளுபடி செய்த மறுநாளே காங்கிரஸுக்கு வருமான வரித்துறையிடம் இருந்து 1,700 கோடி ரூபா அறிவித்தல் வந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2017-18 முதல் 2020-21 வரையிலான ஆண்டுகளுக்கான வருமான வரி மற்றும் அபராதம் ஆக இந்த 1,700 கோடியை செலுத்த வேண்டும் என வருமான வரித்துறை அறிவித்தல் அனுப்பி இருக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம்தான் வருமான வரித் துறை அதிகாரிகள் காங்கிரஸ் கட்சியின் வருமான வரி கணக்குகளில் தவறுகள் இருப்பதாகக் கூறி ரூபா 200 கோடி அபராதம் விதித்து இருந்தது. காங்கிரஸ் நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், அவர்களின் கணக்குகளை முடக்கியது. இந்தச் சூழலில்தான் இப்போது ரூ.1700 கோடி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தலுக்கு முன்னதாக இந்த உத்தரவு வந்துள்ள நிலையில், வருமான வரித்துறையின் இந்த உத்தரவு ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்று காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

## மாலைதீவுக்கு தண்ணீரை நன்கொடையாக வழங்கிய சீனா!



மாலைதீவில் நிலவும் கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை போக்க, திபெத்தில் உள்ள பனிப்பாறைகளில் இருந்து பெறப்படும் 1,500 தொன் குடிநீரை சீன அரசு நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த நன்கொடையானது மாலைதீவுக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவின் ஒரு பகுதியாக வருகிறது. குறிப்பாக நவம்பர் 2023 இல் ஜனாதிபதி மொஹமட் முய்ஸு பதவியேற்றதிலிருந்து இந்த ஆதரவு வழங்கப்படுகின்றது.

திபெத் தன்னாட்சிப் பகுதி, உயர்தர பிரீமியம் ரக தண்ணீரை தயாரிப்பதில் புகழ்பெற்றது.

மாலைதீவுக்கு சீனா உதவி செய்வது இது முதல் நிகழ்வு அல்ல. புதிதாக கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் மாலைதீவு சீனாவின் இராணுவத்திடம் இருந்து இலவசமாக அபாயகரமானதாக அல்லாத இராணுவ உபகரணங்களையும், பயிற்சியையும் பெறும் என்று மார்ச் மாதம் ஜனாதிபதி முய்ஸு அறிவித்தார்.

மாலைதீவுக்கான சீனாவின் உதவி வரலாற்று ரீதியாக நகர்ப்புற மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. மாலைதீவுகள், பெரும்பாலும் பவளப்பாறைகள் மற்றும் மணல் திட்டுகளால் ஆனவையாகும். நிலத்தடி நீர் மற்றும் நன்னீரின் தீவிர பற்றாக்குறையை அந்நாடு எதிர்கொள்கிறது. இது காலநிலை மாற்றத்தால் அதிகரிக்கிறது.

# இந்தியாவின் புதிய அரசை தீர்மானிக்கப் போகும் 97 கோடி வாக்காளர்கள்!




இந்திய ஜனநாயக நாட்டில் தேர்தல் என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். அந்த வகையில் இந்திய மக்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட லோக்சபா தேர்தல் தற்போது நெருங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு லோக்சபா தேர்தல் ஏப்ரல் 19 இலிருந்து ஏழு கட்டங்களாக தொடங்கவிருக்கிறது.

அதன்படி ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் கட்டம், ஏப்ரல் 26 ஆம் திகதி இரண்டாம் கட்டம், மே 7 ஆம் திகதி மூன்றாம் கட்டம், மே 13 ஆம் திகதி நான்காம் கட்டம், மே 20 ஆம் திகதி ஐந்தாம் கட்டம், மே 25 ஆம் திகதி ஆறாம் கட்டம் மற்றும் ஜூன் 1 ஆம் திகதி ஏழாம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. இப்படி இந்தியாவின் மிகப் பெரிய லோக்சபா தேர்தல் நடைபெற உள்ள வேளையில் அதைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

இதுவரை இந்தியப் பிரதமர்களாக இருந்தவர்கள் யார் யார்? அவர்களின் பதவிக்காலம் என்ன? ஆகிய விபரங்களை இங்கே பார்க்கலாம்.

இந்தத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை ஜூன் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மொத்தம் 543 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. ஒட்டுமொத்த இந்தியாவும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மிகப்பெரிய தேர்தலாக இது இருக்கும்.

லோக்சபா தேர்தலில் மொத்தம் சுமார் 97 கோடி பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். மேலும் 10.5 இலட்சம் வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்படும். தேர்தல் சரியாக நடைபெறுவதைக் கண்காணிக்க 1.5 கோடி வாக்குச்சாவடி அதிகாரிகளும் மற்றும் பாதுகாப்பு ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏராளமான வாக்குப்பதிவு இயந்திரங்களும், 4 இலட்சம் வாகனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். வெளிநாட்டு இந்தியராக இருந்தால் அதற்குரிய படிவம் மூலம் பெயரை பதிவு செய்யலாம். வாக்கை நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது ஒன்லைன் தளங்கள் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். அதற்கான ஏற்பாடுகளும் உள்ளன.

இந்தியாவில் பலதரப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். பாலினம் மற்றும் முதல் முறை வாக்கு அளிப்பவர்கள் அடிப்படையில் அவர்கள் பிரிக்கப்படுகிறார்கள்.

நோட்டா என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து ஒக்டோபர் 2013 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களிலும் (EVMகள்) நோட்டா அல்லது 'மேலே இல்லை' என்ற விருப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு எந்தக் கட்சிக்கும் வாக்களிக்க விருப்பம் இல்லாத சமயங்களில் நோட்டா வாக்கைப் பதிவு செய்யலாம். கடந்த தேர்தலில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் அதிகப்படியாக நோட்டா வாக்குகள் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய லோக்சபாவின் பதவிக்காலம் ஜூன் 16 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதற்கு முன்னர் புதிய அவை அமைக்கப்பட வேண்டும்.

இந்திய நாட்டின் பிரதமரை நிர்ணயிக்கும் இந்தத் தேர்தலானது மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை இந்திய நாட்டில் ஏராளமான பிரதமர்கள் பதவி வகித்துள்ளனர். அவர்கள் எவ்வளவு ஆண்டுகள் இந்த நாட்டை ஆட்சி செய்தார்கள் என்று பார்க்கலாம். ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தியில் தொடங்கி இன்றைய பிரதமர் நரேந்திர மோடி வரை அவர்களின் பதவிக்காலம் என்ன, அவர்களின் பொறுப்புகள் என்ன என்பதைப் பற்றி இங்கு அறியலாம்.

சுதந்திர இந்தியாவில் அத்திவாரத்தை படைத்தவர்கள் ஏராளம். இந்திய நாட்டை சிக்கல்களில் இருந்து காப்பாற்றி தொலைநோக்கு பார்வையில் வழிநடத்திய தலைவர்கள் ஏராளம். அவ்வாறான மாபெரும் தலைவர்கள் இந்தியப் பிரதமராக இருந்து பணியாற்றிய காலம் குறித்தும், அவர்களின் சிறப்பான ஆட்சி குறித்தும் அறிந்து கொள்வோம்.



## பாரத நாட்டை கடந்த காலத்தில் ஆட்சி செய்த ஆற்றல் மிகுந்த பிரதமர்கள்!

பண்டிட் ஜவஹர்லால் நேரு என பெருமையுடன் அழைக்கப்பட்டவர் அன்றைய பிரதமர் நேரு ஆவார். இவர் தான் முதல் இந்தியப் பிரதமர் ஆவார். இவர் சுமார் 17 ஆண்டுகள் இந்தியாவை ஆட்சி செய்துள்ளார். 1947 இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து 1964 இல் அவர் இறக்கும் வரை நேரு பிரதமராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேரு நவீன இந்தியாவின் அடித்தளத்தை வடிவமைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனநாயகம், மதச்சார்பின்மை மற்றும் சோசலிசம் ஆகியவற்றைப் போற்றுதல், பொருளாதார சீர் திருத்தங்களின் தொடக்கம், திட்டக் கமிஷன் மற்றும் ஐ.ஐ.டி போன்ற முக்கிய நிறுவனங்களை கட்டியெழுப்பியதில் நேருவின் பங்கு முக்கியமானது.

1964 ஆம் ஆண்டில் 13 நாட்களும் மற்றும் 1966 இல் 13 நாட்களும் ஜவஹர்லால் நேரு மற்றும் லால் பகதூர் சாஸ்திரியின் மரணத்தைத் தொடர்ந்து குல்சாரிலால் நந்தா இரண்டு சந்தர்ப்பங்களில் இந்தியாவின் தற்காலிகப் பிரதமராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் குறுகிய காலமே பணியாற்றினாலும் கூட அவரின் முயற்சிகள் போற்றுதலுக்குரியன. தற்காலிகமாக நாட்டை பேணுவதில் சிறந்து விளங்கினார்.

லால் பகதூர் சாஸ்திரி ஜவஹர்லால் நேருவிற்கு பிறகு பிரதமரானார். சுமார் 1 வருடம், ஏழு மாதம் பணியாற்றி உள்ளார். 1965 இன் இந்திய_பாகிஸ்தான் போரின் போது அவரது தலைமை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. 'ஜெய் ஜவான் ஜெய் கிசான்' என்ற முழக்கம் மக்களிடையே தேசப்பற்றை விதைத்தது. இந்திய தலைமுறைக்கு தேசத்தின் உணர்வை தூண்டியது.

'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா' என்பதற்கிணங்க ஜவஹர்லால் நேருவின் மகளான இந்திரா காந்தி இந்தியாவை 1966 _1977 மற்றும் 1980_1984 என்ற குறுகிய காலத்தில் ஆட்சி செய்தார். வங்கிகளின் தேசியமயமாக்கல் மற்றும் பசுமைப் புரட்சி போன்ற குறிப்பிடத்தக்க சாதனைகள் இவர் பெயரை சொல்லும். அவசரகாலத்துக்குப் பிறகு 1977 தேர்தலில் தோல்வியடைந்த இந்திரா காந்தி, அடுத்த நான்கு மாதங்களுக்குள் தோல்வியிலிருந்து மீண்டு சாதனை படைத்தார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இருந்த மொரார்ஜி தேசாய் 2 ஆண்டுகள் இந்தியப் பிரதமராக பணியாற்றினார். இந்திரா காந்தியால் விதிக்கப்பட்ட அவசரநிலைக்குப் பிறகு சிவில் உரிமைகள் மற்றும் ஜனநாயக விதிமுறைகளை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரண் சிங் ஆறு மாதங்கள் இந்தியாவின் பிரதமராக சிறிது காலம் பணியாற்றினார். ஒரு கூட்டணி அரசாங்கத்தையே வழிநடத்தினார்.

இந்திரா காந்தி இறந்த பிறகு அவரது மகனான ராஜீவ் காந்தி இந்தியாவின் பிரதமராக 5 ஆண்டுகள் பணியாற்றினார். இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தை நவீனமயமாக்குதலில் அவரின் பங்கு முக்கியமானது.

விஸ்வநாத் பிரதாப் சிங் 11 மாதங்கள் இந்தியாவின் பிரதமராக பணியாற்றினார். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை இவர் எடுத்தார்.

சந்திரசேகர் 8 மாதங்கள் இந்தியப் பிரதமராக பணியாற்றினார். பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் நிறைய விஷயங்களை சாதித்துக் காட்டினார்.

பி. வி நரசிம்மராவ் 5 ஆண்டுகள் இந்தியப் பிரதமராக பணியாற்றினார். பொருளாதார சீர் திருத்தங்களை சரியாக வழிநடத்தினார். இது இந்தியா ஒரு உலகளாவிய பொருளாதார சக்தியாக வெளிப்படுவதற்கு வழிவகுத்தது.

அடல் பிகாரி வாஜ்பாய் (1996, 1998 _2004)1996 இல் 13 நாட்கள் அதன் பிறகு 6 ஆண்டுகள் இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார். இந்தியாவின் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், அண்டை நாடுகளுடன் அமைதியை மேம்படுத்துதல் மற்றும் இந்தியாவின் உலகளாவிய அந்தஸ்தை மேம்படுத்துதல் போன்ற முயற்சிகளில் இவர் ஈடுபட்டார்.

மன்மோகன் சிங் (2004_2014) பத்து ஆண்டுகள் இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார். இந்தியாவின் சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதிலும், இந்திய பொருளாதாரத்தை முன்னேற்றுவதிலும் மிக முக்கியமான பங்கு வகித்தார்.

நரேந்திர மோடி 2014 இல் பதவியேற்றார். அவர் இன்றுவரை இந்தியாவின் பிரதமராக பணியாற்றி வருகிறார். பொருளாதார மேம்பாடு, உள்கட்டமைப்பு மற்றும் சமூகநலத் திட்டங்களில் நரேந்திர மோடி கவனம் செலுத்தினார். அவர் இந்தியாவை டிஜிட்டல் இந்தியாவாக மாற்றினார்.

**எஸ்.சாரங்கன்...**

# யாழ்நூல் படைத்த விபுலாநந்த அடிகளாருக்கு அவுஸ்திரேலியா சிட்னி நகரில் உருவச்சிலை






தமிழரின் இசை, நடனம், நாடகம் தொடர்பான பல்வேறு நுட்பங்கள் குறித்த விபரங்களை உள்ளடக்கிய தமிழ்க் காப்பிய நூல் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை தமிழ் இசை நுணுக்கங்கள் குறித்த சில விளக்கங்களைத் தந்தாலும், அவ்விசை குறித்து முழுமையாக அறிந்து கொள்வதற்கு இவை போதுமானதாக அமையவில்லை.

சிலப்பதிகாரத்தை நன்கு கற்றிருந்த விபுலாநந்த அடிகளார், அந்நூலின் சொல்லப்பட்டிருந்த இசை நுணுக்கங்கள் குறித்தும், பல்வேறு தமிழ் இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் பின்னர் வழக்கற்றுப் போய்விட்ட யாழ் என்னும் இசைக்கருவி குறித்தும் அறிய ஆர்வம் கொண்டார்.

சுவாமி விபுலாநந்தர் கணிதம், இயற்பியல் ஆகியவற்றிலும் விற்பன்னராக இருந்ததால், இந்த ஆய்வுக்கு அவை உதவியாக அமைந்தன.

**பழந்தமிழரின் இசை நுட்பங்கள்:**

பழந்தமிழரின் இசை நுட்பங்கள், யாழ் ஆகியன பற்றி ஆராய்ச்சி முறையாக விபரிக்கும் ஒரு முதல் நூல் யாழ் நூலாகும்.

பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில் யாழ், பேரி யாழ், மகரயாழ், செங்கோட்டி யாழ், சீறி யாழ், சகோட யாழ் என்பன பற்றி யாழ்நூல் கூறுகின்றது. இந்நூலை இயற்றியவர் இலங்கையின் கிழக்கில் அவதரித்த சுவாமி விபுலாநந்தர் ஆவார். சுவாமி விபுலாநந்தரின் உருவச்சிலை நேற்று சிட்னியில் திறந்து வைக்கப்பட்டது.

**மூன்று பதிப்பு கண்ட யாழ்நூல் :**

யாழ் நூல் இதுவரை மூன்று பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. முதற் பதிப்பு 1947 இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தால், கரந்தை கூட்டுறவுப் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் பின்னர் 1974 இல் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது பதிப்பையும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரே வெளியிட்டனர்.

பல அமைப்புக்களும், தனியாரும் வழங்கிய நிதியுதவி இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த இரண்டாம் பதிப்பில் க. வெள்ளைவாரணர் தமிழில் வழங்கிய முன்னுரை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், கொழும்புப் பல்கலைக்கழக இதழில் வெளியான விபுலாநந்தரின் 'ஆயிரம் நரம்பு யாழ்' என்னும் ஆங்கிலக் கட்டுரையும் இரண்டாம் பதிப்பில் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டது.

அதன் பின்னர், சில புலம்பெயர்ந்து வாழும் ஆர்வலர்களினதும், பிறரதும் துணையுடன் திருநெல்வேலி யாதுமாகி பதிப்பகத்தின் சார்பில் யாழ் நூலின் மூன்றாம் பதிப்பு 2003 இல் வெளியானது. இப்பதிப்பில் நா. மம்மது அவர்களின் கருத்துரை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர்:**

விபுலாநந்த அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குத் தலைவராக இருந்த காலத்தில், கருநாடக இசையின் அமைப்பு, நுணுக்கங்கள் ஆகியவை பற்றி அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

1936 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் இடம்பெற்ற இவரது பேச்சொன்றில், பழந்தமிழருடைய யாழ்கள் பற்றி விளக்கியதுடன் அவற்றின் அமைப்பையும் படங்கள் மூலம் விளக்கினார். இவரது ஆய்வுகளில் ஆர்வம் கொண்ட அறிஞர்கள் பலரும் இவரது ஆய்வுகளை நூலாக வெளியிடுமாறு ஊக்கம் கொடுத்தனர். எனினும், வெவ்வேறு காலகட்டங்களில் இவரது பணிகள் காரணமாக இந்த ஆய்வு தடைப்பட்டிருந்தது.

இந்தியாவில் இமயமலைச் சாரலில் 'பிரபுத்த பாரதம்' என்னும் ஆங்கில நூலுக்கு ஆசிரியராக இருந்தபோதும், பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போதும் இந்த ஆய்வை நிறைவு செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஆய்வுக் காலத்தில், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய தமிழ்ப் பொழிலிலும், மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த செந்தமிழ் என்னும் இதழிலும் இவ்வாய்வுடன் தொடர்புள்ள பல கட்டுரைகள் வெளிவந்தன.

அத்துடன் திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள வானொலி நிலையங்களில் இது தொடர்பான விபுலானந்தரின் பேச்சுக்கள் இடம்பெற்றன. மேற்குறித்த கட்டுரைகளிலும், பேச்சுக்களிலும் இருந்த விடயங்களும் கருத்துக்களும் யாழ்நூலில் இடம் பெற்றுள்ளன.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# வேலோடுமலை முருகன் ஆலயத்தில் இ.கி.மி ஏற்பாட்டில் அன்னதான மண்டபம்

இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஈரளகுளம் வேலோடு மலை ஸ்ரீமுருகன் ஆலயத்தில் அன்னதான மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வேலோடுமலை முருகன் ஆலய தர்மகர்த்தா எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற அன்னதான மண்டப திறப்பு விழாவில், இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மண்டபத்தை திறந்து வைத்தார். லண்டனில் வாழும் திருமதி ஜீவா தேவி வரதராஜன், காலஞ் சென்ற திரு. மயில்வாகனன் வரதராஜன் AVS அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த அன்னதான மண்டபத்தை இராமகிருஷ்ண மிஷன் வேண்டுகோளின்படி நிறுவியுள்ளனர்.







இந்தப் பணியை இராமகிருஷ்ண மிஷன் தொண்டர் கருணாநிதி அவர்கள் பொறுப்பேற்று முருகன் ஆலயத்தின் தலைவர் தியாகராஜா அவர்களின் ஒத்துழைப்போடு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

அன்னதான மையத்தோடு இணைந்து சமய நூல்கள் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் பக்தர்கள் மற்றும் அன்பர்கள் கலந்து கொண்டனர்.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

### பொதுத் தேர்தல் நடத்தப்படுவதை விட

# ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே இப்போதைக்கு உகந்த தீர்மானம்

## ஐ.தே.க. வின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமாகுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் இடம்பெற்றால் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. அவ்வாறான நிலை ஏற்பட்டால் நாடு மீண்டும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைவதுடன், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும். எனவே ஆரம்பமாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் கூறினார்

மல்வத்து மற்றும் அஸ்கிரி மஹா நாயக்க தேரர்களிடம் நேற்று (29) ஆசிர்வாதம் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர், ஒக்டோபர் காலப்பகுதிக்குள் நடத்த வேண்டும். அதன் பிரகாரமே ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். என்றாலும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுன உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் கோரி வருகின்றன. ஆனால் நாட்டின் தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் நடைபெற்றால் எந்தவொரு கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைப்பதற்கு போதுமான பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி முன்னெடுத்து வரும் அனைத்து வேலைத்திட்டங்களும் தடைப்படும். நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீண்டும் பின்தள்ளப்படும். அதனால் ஆரம்பமாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு, அதில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக வெற்றி பெறுவார். அதன் பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு சென்றால் நிலையான ஆட்சி ஒன்றை நாட்டில் ஏற்படுத்தலாம்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் பிரதமராக இருந்தே குறுகிய அதிகாரங்களுடன் நாட்டின் அபிவிருத்திக்கு பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார். ஆனால் தற்போது நாடு வங்குராத்து அடைந்திருந்த சந்தர்ப்பத்தில் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பல வேலைத் திட்டங்களை அவருக்கு செய்ய முடியுமாகி இருந்தது. அதனாலே குறுகிய காலத்தில் நாட்டை வங்குராத்து நிலையில் இருந்து மீட்டு, மக்கள் தங்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்தார்" என்றும் தெரிவித்தார்.

# 7 வயது சிறுமி துஷ்பிரயோகம்: 69 வயது நபர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஏழு வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் 69 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக கல்லஞ்சிய பொலிசார் தெரிவித்தனர்.

கல்லஞ்சிய பொலிஸ் பகுதிக்குட்பட்ட 69 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் குறித்த சம்பவம் இடம்பெற்றது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி உறவுக்கார நண்பியிடம் சொன்ன போது அதனை கேட்டுக்கொண்டிருந்த வயதான பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அருள்மிகு ஸ்ரீ வெக்காளியம்மன் ஆலய முதலாம் வருஷாபிஷேகம் தேர்திருவிழா

கொழும்பு 13, ஜெம்பட்டா வீதி, அருள்மிகு ஸ்ரீ வெக்காளியம்மன் தேவஸ்தானத்தின் முதலாம் வருட வருஷாபிஷேமும் அலங்காரத் தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 31 ஆம் திகதி கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகியது. இன்று 1ஆம் திகதி நடைபெறும் கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் யாவும் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி 108 கலசபிஷேகமும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 12ஆம் திகதி பங்குனித் திருவிழாவும் 16ஆம் திகதி வைரவர் மடையும் நடைபெறும்.

# கேரள கஞ்சாவுடன் பஸ் சாரதி கைது

**( கல்நேவ தினகரன் விசேட, அனுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள் )**

அனுராதபுரம் கோட்ட மோட்டார் போக்குவரத்து பொலிசார். மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது தனியார் பஸ் வண்டி ஒன்றின் பஸ் சாரதியின் ஆசனத்திற்கு கீழ் சூட்சகமான முறையில் மறைத்து கொண்டு சென்ற 2 கிலோ 100 கிராம் கேரள கஞ்சாவை கைப்பற்றி உள்ளதாக அனுராதபுரம் கோட்டத்திற்கு பொறுப்பான மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மொகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

வவுனியா கொழும்பு புத்தளம் ஊடாக பயணிக்கும் பஸ் வண்டியொன்றை அனுராதபுரம் பண்டுலுகம பகுதியில் வைத்து சோதனை செய்த போதே இந்த கேரளா கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பஸ் சாரதி சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த .சுரங்க என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# விபத்தில் ஆசிரியர் மரணம்

**( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

பாதெனிய அனுராதபுரம் ஏ 28 வீதியில் சிரவஸ்திபுர சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பவுசர் வண்டி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த ஆசிரியர் மரணமடைந்துள்ளதாக அனுராதபுரம் கோட்டத்திற்கு பொறுப்பான மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.நியாஸ் தெரிவித்தார்.

இவ்வாறு மரணமடைந்தவர் தலாவ மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் 43 வயதுடைய தலாவ வராகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஜே. பாலித சனத் தர்மசிறி என்பவராவார். மரணமடைந்தவர் அனுராதபுரம் நகரில் இருந்து தலாவ பிரதேசத்திலுள்ள தனது வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போதே பவுசரின் பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளார்.

## அறிக்கையிடும் புதிய அணுகுமுறை...

Watch Foundation IWF உடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதுடன், இதற்கான நிதி உதவியை Save the Children & Child Fund வழங்கியுள்ளது.

இந்த இணையவழி முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் www.childprotection.gov.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து, இணையத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் சிறுவர்களின் ஆபாச புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைப்படங்கள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உதவியுடன் IWF நிறுவனத்திடம் முறைப்பாடு செய்ய முடியும். பின்னர் அந்த நிறுவனத்தால், காணொளிகள் இணையத்திலிருந்து அகற்றப்பட்டு சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 011 2778911 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியுமென்பதுடன், சட்ட செயற்பாடுகள் தொடர்பாக அறிந்துகொள்ள 269 என்ற தொடர் இலக்கத்தினூடாகவும் www.childprotection.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தள பக்கத்துக்கு பிரவேசிப்பதன் மூலமும் அறிந்துகொள்ள முடியும்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க மற்றும் சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்களுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

மேற்படி குழுவின் அறிக்கை ஒக்டோபர் 2023 இல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் பல தரப்பினருடனும் ஆலோசித்து சிறுவர் பாதுகாப்பு தொடர்பான குறுகியகால, இடைக்கால, நீண்டகால தீர்வுகளுக்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு கட்டமைப்புக்குள் பணியாற்றும் நிறுவனங்கள் தொடர்பான இடைக்கால பரிந்துரைகளை செயற்படுத்த முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும், பிரச்சினைகளின் தன்மைக்கமைவாக முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டத்தை 06 மாதங்களில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக இதுவரை எந்தவொரு அரசாங்கமும் கவனம் செலுத்தாமல் இருந்தமையும் மிகப்பெரிய பிரச்சினையாகியுள்ளதென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

தற்போதைய நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது கடினமாக இருந்தாலும், சிறுவர் பாதுகாப்புக்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

மேற்படி குழுவின் அறிக்கையை விரைவில் செயற்படுத்த வேண்டியது அவசியமெனவும், அதற்காக அமைச்சு, பொலிஸ், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சீர்திருத்த நிலையங்களின் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவை நிறுவுமாறு அறிவுறுத்தியிருப்பதாகவும், சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புக்கான புதிய சட்டமூலங்களை கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, உரிய அமைச்சுகளின் அதிகாரிகள், சட்டமாஅதிபர் சஞ்சய ராஜரத்தினம், சொலிசிட்டர் ஜெனரல் அயேசா பியசேன,பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதானிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## ஷங்ஹாய்கொழும்பு சகோதர நகர...

இதன்போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. உலகின் துறைமுக நகரங்களில் முதலிடம் வகிக்கும் சீனாவின் ஷங்ஹாய் நகருக்கும் எதிர்காலத்தில் கிழக்கு மற்றும் மேற்குக்கும் இடையே கப்பல் போக்குவரத்து மையமாக மாறத் திட்டமிடப்பட்டுள்ள கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை நகரங்களுக்குமிடையே வலுவான தொடர்பை ஏற்படுத்த இதன்போது இணக்கம் காணப்பட்டது.

கொழும்புக்கும் ஷங்ஹாய் நகரத்துக்கும் இடையிலான சகோதர நகர உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நீண்டகாலம் கடந்துள்ளதுடன், பிரசன்ன குணவர்தன நகரபிதாவாக இருந்த போது கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் கீழ் இன்னும் பாரிய பணிகளை மேற்கொள்ள முடியுமெனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

ஷங்ஹாய் நகரம் சரக்கு போக்குவரத்தில் 49.5 மில்லியன் கொள்கலன்களை கையாளும் பணிகளை பூர்த்தி செய்து கடந்த வருடம் சரக்கு போக்குவரத்தில் உலகில் முதலிடம் பெற்றுள்ளதுடன், அத்துறையிலிருந்து இலங்கை கற்கக்கூடிய பாடங்கள் ஏராளமென சுட்டிக்காட்டப்பட்டது.

4.72 டிரில்லியன் யுவான் வருடாந்த உற்பத்தி வருமானம் கொண்ட ஷங்ஹாய் நகரம், உலகத் தரம் வாய்ந்த வர்த்தக மையமாகவும் நிதி பரிவர்த்தனைகளுக்கான மையமாகவும் அடைந்துள்ள அனுபவங்களை இலங்கைக்கு வழங்குவதாக ஷாங்காய் நகரபிதா உறுதியளித்தார்.

25 மில்லியன் மக்களை கொண்ட ஷங்ஹாய் நகரின் திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தில் இருந்து இலங்கை கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் பாரியதென பிரதமர் சுட்டிக்காட்டினார்.

ஷாங்காய் நகரபிதா அந்த ஒவ்வொரு துறையிலும் இலங்கைக்கு ஆதரவளிக்க தனது இணக்கத்தை வெளிப்படுத்தியதுடன், அந்தந்த துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை ஷங்ஹாய்க்கு வந்து அந்த துறைகளை ஆய்வு செய்ய அழைத்தார்.

பல யுனெஸ்கோ பாரம்பரிய தளங்களைக் கொண்ட இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான சீன மக்களின் ஆர்வம் அதிகரித்துள்ளதுடன், கொழும்பு மற்றும் ஷங்ஹாய் இடையிலான விமான சேவைகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவும் இணக்கம் காணப்பட்டது.

## ஹைபிரஷர் காற்று குழாயை...

செய்யப்பட்டுள்ளனர். இந்த நிறுவனத்தில் பணியாற்றிய பாணந்துறை, அலுபோமுல்ல பகுதியைச் சேர்ந்த தேஷான் மதுஷங்க என்ற 24 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த திங்கட்கிழமை (25) அந்த நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு ஊழியர்கள், விளையாட்டாக அந்த ஊழியரின் ஆசனவாயில் ஹைபிரஷர் காற்றுக் குழாயை அழுத்திப் பிடித்துள்ளனர். அவருக்கு திடீரென உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் (28) இரவு உயிரிழந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இந்தச் சம்பவம் தொடர்பில் சபுகஸ்கந்த பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்.

## யாழ். மருத்துவ கழிவு எரியூட்டியை...

தொற்று நீக்கி, பாதுகாப்பாக அகற்றுவதற்கான அவசியம் நீண்டகாலமாக உணரப்பட்டதுடன், இதற்காக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் 40 மில்லியன் ரூபா நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த எரியூட்டியானது, நீண்டகால எதிர்பார்ப்புக்கு தீர்வாக அமைந்துள்ளது" என்றார்.


## ஆசிரியர் உதவியாளராக....

உள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அதற்கு தீர்வாக தற்போது ஊவா மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அந்தந்த மாகாண அதிகாரிகளிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம் தகைமை பெற்ற ஐந்நூறு ஆசிரியர் உதவியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு கல்வி அமைச்சுக்கு அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் மூன்று வருடங்களுக்குள் ஆசிரியர் மத்திய நிலையங்கள் மூலம் டிப்ளோமா மட்டத்தில் அவர்கள் பயிற்சியளிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்எனவும்அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


# இன்றைய பலன்கள் (30.03.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**




**மேஷம் :** உத்தியோகத்தில் உங்களுக்கு கிடைக்கப்பெறும் சில சலுகைகளை சகபணியாளர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள்.



**ரிஷபம் :** உத்தியோகத்தில் சிலருக்கு உயர் பதவியும் சக பணியாளர்களின் அரவணைப்பும் இருக்கும். அலுவலகத்தில் கேட்ட கடன் தொகை கிடைத்து மகிழ்வீர்கள்.



**மிதுனம் :** உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்துவதோடு பொறுமையாகவும் செயல்படுங்கள்.



**கடகம் :** முக்கிய பணிகளை சரியாக திட்டமிட்டு செய்யுங்கள். உத்தியோகத்தில் உங்கள் சிறிய தவறும் உயர் அதிகாரிகளின் கோபத்தை அதிகரிக்கலாம்.




**சிம்மம் :** உத்தியோகத்தர்கள் சக பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சொந்த தொழில் எதிர்பார்க்க முன்னேற்றம் காணப்படாது.



**கன்னி :** உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்தில் கேட்டிருந்த கடன் தொகை வந்து சேரும். தள்ளிவைத்த வேலையை உடனே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.




**துலாம் :** சிலருக்கு வரவேண்டிய பணவரவு தள்ளிப்போகும். சொந்தத் தொழிலில் வேலை பளு அதிகரிக்கும். வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் பணிகளை முடித்துக் கொடுக்க ஒய்வின்றி உழைப்பீர்கள்.



**விருச்சிகம் :** உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளில் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். சொந்தத் தொழிலில் மூலப் பொருள் பற்றா குறையால் செய்யும் தொழில்கள் தடைபடலாம்.



**தனுசு :** மறதியால் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். முக்கிய ஆவணங்களை கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள்.



**மகரம் :** உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வும், சம்பள உயர்வும் ஏற்படலாம். சிலருக்கு அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய தொகை வந்து சேரும்.



**கும்பம் :** உற்றார் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்துங்கள்.



**மீனம் :** அலுவலகத்திலேயே பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கக்கூடும். சொந்த தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் வருகையால் பணவசதி அதிகரித்தாலும் ஒய்வின்றி அந்த பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டியது இருக்கும்.

## பொலிஸ் சார்ஜன்டுக்கு...

சார்ஜன்ட்டுக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுகளுடன் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளிலும் மேற்படி பொலிஸ் சார்ஜன்ட் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டதை அடுத்து, இச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், 20,000 ரூபா அபராதம் செலுத்துமாறும் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது. இலஞ்சமாக பெற்ற 500 ரூபாவை அம்முச்சக்கரவண்டி சாரதியிடம் திருப்பிக்கொடுக்குமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டது.

## பணம் இல்லாததால் மக்களவை...

கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ஜே.பி.நட்டா, ஆந்திர பிரதேசம் அல்லது தமிழ்நாடு ஆகியவற்றில் ஏதாவதொரு இடத்தில் மக்களவை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கினார்.

இது தொடர்பாக ஒரு வாரமும் 10 நாட்கள் நன்றாக சிந்தித்துவிட்டு, பின்னர் முடியாதென பதில் அளித்தேன். தேர்தலில் போட்டியிடுவதற்கான பணம் என்னிடம் இல்லை. இதேவேளை எனக்கும் ஆந்திராவா அல்லது தமிழ்நாடா என்ற பிரச்சினை உள்ளது" என்றார்.

## போதைப்பொருள், பாதாள...

பாதாள குழு செயற்பாடு முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்வரை 'யுக்திய' சுற்றிவளைப்பு தொடரும்.

பாதாள குழுச் செயற்பாடுகள், போதைப்பொருள் விற்பனை தொடர்பாக மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர். 'யுக்திய' சுற்றிவளைப்பால் எதிர்வரும் ஒரு மாத காலத்துக்குள் நல்ல மாற்றத்தை ஏற்படுமென்ற நம்பிக்கை உள்ளது" என்றார்.

## வெலிக்கடை சிறைச்சாலை...

மதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாக, சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பாராளுமன்றம் ஏப்ரல் மாதம்...

மாலை 4.30 மணிவரை கடந்த 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுர்வேத சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான பிரேரணை எப்ரல் 01ஆம் திகதி 14ஆம் இலக்க பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு தனிநபர் சட்டமூலமான சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீட்டின் பின்னர் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

இதன் பின்னர் மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை அரசாங்கத் தரப்பினால் கொண்டு வரப்படும் ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

ஏப்ரல் 02ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை வங்கித்தொழில் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான 2358/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, பெறுமதி சேர் வரி சட்டத்தின் 2363/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான 2370/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணி முதல் மாலை 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்படும் ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படவுள்ளது.

# சரசவிய திரைப்பட விருது விழா

## 2019ஆம், 2020ஆம் ஆண்டுகளில் திரையிடப்பட்ட படங்கள்


தகுதிகாண் விருது – இசுரு லொகுஹெட்டியாரச்சி (ஹூஸ்ம)


கலைஞர் ஜக்ஸன் அந்தனிக்காக வழங்கப்பட்ட கௌரவம்


கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் ஞாபகார்த்த விருது – சதிஸ்சந்ர எதிரிசிங்க


சிறந்த பாடகி நந்தா மாலினி (த நியூஸ்பேப்பர்)


சிறந்த இசையமைப்பாளர் – சுமுது குருகே


ரணபால போதினாகொட ஞாபகார்த்த இலக்கிய விருது – சிறி கஹவல


சிறந்த நடிகை – சமாதி லக்சிறி


சிறந்த நடிகர் – விமல் ஜயகொடி


சிறந்த இயக்குநர் – மலித் ஹெகொடவுக்காக


சிறந்த இயக்குநர் – விசாகேச சந்ரசேகரத்துக்காக


சிறந்த திரைப்படம் – த நியூஸ்பேப்பர்


சிறந்த இசையமைப்பாளர் – சிந்தக லக்மால் ஜயகொடி


சிறந்த கலை இயக்குநர் – குமார கரச்சிதெனிய

(படங்கள்: விமல் கருணாதிலக, திலக் பெரேரா, மாலன் கருணாரத்ன, சிந்தக குமாரசிங்க, ருக்மால் கமகே, துஷ்மந்த மாயதுன்ன, நிஸ்ஸங்க விஜேரத்ன, ஷான் ரூபஸ்ஸர, வாசித பட்பெதிகே, சுதத் நிஷாந்த)

# கிழக்கின் குரல்



## உயிரிழந்த நிலையில் யானை மீட்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலகத் திற்குட்பட்ட சர்வோதயபுரம் ஆத்தி முனை கிராமத்தில் நேற்று வெள்ளிக் கிழமை (29) காலை யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்திற்குள் நுழைந்த இந்த காட்டு யானையே இவ்வாறு உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

பொது மக்கள் வழங்கிய தகவல் களுக்கமைய ஸ்தலத்திற்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானை உயிரிழந்துள்ளமை தொடர்பாக விசாரணை மேற் கொண்டனர்.

10முதல் 15 வயது மதிக்கத்தக்க



இந்த யானை சர்வோதயபுரம் ஆத்திமுனை கிராமத்தில் உள்ள யானை வேலியிட்டிருந்த பயிர்கள் செய்யும் காணிக்குள் நுழைவதற்கு முற்பட்ட போதே இவ்வாறு யானை வேலியில் சிக்குண்டு மின்சாரம் தாக்கி உயிரிழந் துள்ளதாக வனஜீவராசிகள் திணைக் கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காணியின் பாதுகாப்புக்காக இட்டிருந்த யானை வேலியில் மின்சாரம் பொருத்தப்பட்டிருக்கலாம் என வன ஜீவராசிகள் சந்தேகிக்கின்றனர்.

இலங்கை மின்சார சபை அதி காரிகள் இது தொடர்பாக ஆராய்ந் ததுடன் உரிய காணியில் பயிர் செய்கையில் ஈடுபட்டிருந்த நபர் சந் தேகத்தின் பேரில் கைது செய்யப்பட் டுள்ளதோடு, யானை வேலி உபகர ணங்கள் மற்றும் இறந்த யானையும் பரிசோதனைக்காக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் எடுத் துச் செல்லப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு நகரில் பெரிய வெள்ளி சிலுவைப்பாதை

( மட்டக்களப்பு விசேட நிருபர்)

மனுக்குலத்தின் பாவங்களைப் போக்குவதற்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூரும் பாடுகளை வெளிப் படுத்தும் பெரிய வெள்ளி சிலு வைப்பாதை நிகழ்வு மட்டக்களப்பு நகரில் நேற்று (29) நடைபெற்றது.

மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தை ஜே.நிக்ஸன் தலைமையில் பேராலயத்திலிருந்து ஆரம்பமான சிலுவைப்பாதை மத்திய வீதி, வைத்தியசாலை வீதி, கோவிந்தன் வீதி வழியாக பேராலயத்தை வந்த டைந்தது.

பிரதான வீதிகளின் சந்திகளில்





பக்தர்கள் பக்திபூர்வமாக சிலு வையைச் சுமந்து இயேசுவின் பாடுகளை நினைந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

மனிதர்களின் மீட்சிக்காக இயேசு உயிர்த்தெழுந்த நாளை நினைவுகூரும் உயிர்த்த ஞாயிறு ஆராதனை நாளை ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது

## அம்பாறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி குறித்து சுகாதார அமைச்சில் உயர்மட்ட கலந்துரையாடல்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்ட வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் சுகாதார அமைச்சில் அண்மையில் நடைபெற்றதாக பாராளு மன்ற உறுப்பினர் பைசால் காசிம் தெரிவித்தார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கமைவாக கடந்த வாரம் அம்பாறை மாவட்டத்துக்கு சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இவ்விஜயத்தின் பின்னர் அம்பாறை பிராந்தியத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சுகாதார அபிவிருத்



திகள் தொடர்பில் சுகாதார அமைச்சில் உயர்மட்ட கலந்துரையாடலில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிக்கான சகல வேலைகளையும் எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னர் நிறைவு செய்து மக்கள் பாவனைக்கு கையளித்தல்.

நிந்தவூர் சிறுவர் மற்றும் மகப்பேற்று வைத்தியசாலையின் முதலாவது தளத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பித்தல் மற்றும் குறித்த பணிகளுக்கான நிதியை பெற்றுக் கொள்ள அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.உயர்மட்ட கலந்துரையாடலில் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியக் கலாநிதி பி.ஜி.மஹிபால, சுகாதார அமைச்சின் கட்டட பிரிவுக்கு பொறுப்பான உயர் அதிகாரிகள், சீன அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்ட பணிப்பாளர், அம்பாறை மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவு செய்து, மக்கள் பாவனைக்கு கையளிக்கும் முனைப்போடு செயற்பட்டுவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சுகாதார அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## காசா குழந்தைகளுக்கு காத்தான்குடி சிறுவர் இல்ல மாணவர்கள் நிதியுதவி

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



காசா குழந்தைகளுக்கு உதவும் பொருட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியத்துக்கு காத்தான்குடி சிறுவர் இல்லத்தினால் ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டது.

காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் ஐ.எல். றுபைத் தலைமையில் அதன் சிறுவர்களினால் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைசரிடம் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசலில் வைத்து ஜனாதிபதியிடம் வழங்கி வைப்பதற்காக நிதி கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் பரீட், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன செயலாளர் மௌலவி இல்ஹாம் மற்றும் காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள் அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசல் இமாம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பலஸ்தீன் காஸாவில் குழந்தைகளுக்கு இலங்கையில் இருந்து உதவும் பொருட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியத்துக்கு பலரும் உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடையில் சந்திப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகளை (28) வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில் களத்தில் கடமையாற்றும் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வேலை நாட்களில்



தொடர்ச்சியாக கையொப்பமிடும் நடைமுறையை இல்லாமல் செய்தல் மற்றும் பிரிவு அலுவலகத்தை அரச மற்றும் தனியார் கட்டிடங்களை பிரிவு அலுவலகமாக பயன் படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு வாடகை பணத்தை பெற்றுக் கொடுத்தல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சம்பளம் ஏற்றத்தின் நிலுவையை துரிதமாக வழங்கச் செய்தல் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடினர்

இந்த விடயங்களை கேட்டு அறிந்து கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே முரளிதன் எதிர்காலத்தில் இந்த விடயங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் தலைவர் ரவி செயலாளர் அன்வர் உட்பட அதன் பிரதிநிதிகளும் மாவட்ட சமுர்த்தி அலுவலகம் சார்பில் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி நிர்மலா ஆகியோரும் கலந்து கொண்டனர்

## அம்பாறை, தமண பிரதேச செயலக புதிய கணக்காளராக அர்ஹம் நியமனம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்டம் தமண பிரதேச செயலக புதிய கணக்காளராக அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஏ.ஜி.ஏ.அர்ஹம் நியமிக்கப்பட்டு கடமையேற்றுள்ளார்.

பொதுச் சேவை ஆணைக்குழுவினால் இலங்கை கணக்காளர் சேவை தரம்III க்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அர்ஹமுக்கு, முதலாவது சேவை நிலையமாக, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தமண பிரதேச செயலகத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரியான கணக்காளர் அர்ஹம் அதேதுறையில் முதுமாணிப் பட்டக்கற்கையையும் நிறைவு செய்துள்ளார்.



சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ள அர்ஹம் பட்டயக் கணக்காளர் முகாமைத்துவ நிறுவனத்தில் பட்டப்படிப்பு மற்றும் இணைந்த முகாமைத்துவ பட்டயக் கணக்காளருமாவார்.

அத்துடன் அவர் உலகளாவிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும் தொழிற்பட்டு வருகின்றார்.

கணக்காளர் அர்ஹம் கடமையேற்கும் நிகழ்வில் தமண பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், ஐக்கிய தேசியக் கட்சி பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ. கே. ஆதம்லெவ்வை, அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் எம்.ஏ.சி.றகீப் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

கணக்காளர் அர்ஹம் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இலங்கை வங்கி ஓய்வுநிலை உத்தியோகத்தர் ஏ.பி.அப்துல் கபூர் சபீனா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வராவார்.

## இரத்தினபுரி புதிய நகர பூங்கா அமைப்பதற்கான பணிகள் ஆரம்பம்



இரத்தினபுரி புதிய நகர பூங்கா (New Town Park) அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இரத்தினபுரி புதிய நகர பூங்கா அமைப்பதற்காக அரசாங்கத்தின் மூலம் 1000 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கட்டுமான பணிகளை அனைத்தும் சப்ரகமுவ மாகாண சபையும், இலங்கை இராணுவமும் இணைந்து மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன, சப்ரகமுவ மாகாண சபையின் தலைவர் கஞ்சன ஜயரத்ன, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன உட்பட அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

## திருக்கோவில் பிரதேச செயலகம் தேசிய ரீதியாக சாதனை

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலகம் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய பங்களிப்புக்கான தேசிய மட்ட அடைவை பெற்று சாதனை புரிந்துள்ளது.

சமூகப்பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய பங்களிப்புக்கான தேசிய மட்ட அடைவை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் இவ் வருடம் பெற்றுக் கொண்டமைக்காக அம்பாறை மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (27) நடைபெற்ற பிரதேச செயலாளர்கள் மாநாட்டில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிந்தக அபேவிக்ரமவினால் திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு.தங்கையா கஜேந்திரன் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## களுவாஞ்சிக்குடி புத்தடி நாகதம்பிரான் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி புத்தடி நாகதம்பிரான் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா நேற்று இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை கர்மாரம்ப நிகழ்வு இடம்பெற்று வியாழக்கிழமை பால்காப்பு நடைபெற்றதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதன்போது மூலமூர்த்திக்கும், ஏனைய பரிபாரத் தெய்வங்களுக்கும் கும்பாபிஷேக கிரியைகள் இடம்பெற்றன.

கிரியைகள் யாவும் கிரியாயோதி கிரியா திலகமத் சிவ ஸ்ரீ சண்முக மயூரவதனக் குருக்கள் தலைமையிலான குருமார்கள் மேற்கொண்டனர்.

இதன்போது நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(தோப்பூர் குறூப் நிருபர்)



தோப்பூர் அல்லை நகரை பிறப்பிடமாகவும் ஆசாத் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜாசீன் முகம்மது உமைஸ் மூதூர் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அண்மையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நீண்டகாலமாக சமூக சேவையில் ஈடுபட்டு வரும் இவர் ஆசாத் நகர் ஜும்ஆ பள்ளி பரிபாலன சபை செயலாளராகவும், ஆசாத் நகர் கிராம அபிவிருத்திச்சங்க தலைவராகவும் மற்றும் தாருல்ஹாதி முன்பள்ளி தலைவராகவும் மேலும் பல்வேறு அமைப்புக்கள் மூலமாக ஊரின் அபிவிருத்திக்கு பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

'பாராட்டத்தக்க சிறுவர்களை எவ்வாறு உருவாக்குவது' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் கமு/இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் அதிபர் அப்துல் கபூர் ரிசாத் மேற்பார்வையில் நடைபெற்றது. இதற்கான அனுசரனையை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வழங்கியது. இந்நிகழ்வில் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்.ஏ.கே.காமிலா, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. பி.ஜெனிதா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.ஸாஜித் ஆகியோர் உரையாற்றினர்.

## சுவாமி விபுலானந்தரின் 132ஆவது ஜனன தினம்





(தம்பலகாமம் குறூப் நிருபர்)

சுவாமி விபுலானந்தரின் 132 ஆவது ஜனன தின நிகழ்வு திருகோணமலை தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

# வடக்கின் உதயம்

## யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டும் இயந்திரம் திறந்து வைப்பு

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலைக்கான எரியூட்டி இயந்திரத்தை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொள்முதல் செய்த எரியூட்டி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முன்பதாக வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்திருந்தன. இதனால் எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்வதில் கடும் இழுபறி ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய யாழ். மாநகர சபை, கோம்பயன்மணல் மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் எரியூட்டி கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சி ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ஆயுர்வேத சிகிச்சைகளுக்கு செல்லும் நோயாளிகளுக்கு மருந்துகளை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவர்கள் பரிந்துரைப்பதாகவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும்பாலான பொதுமக்கள் மருந்துகளை கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக 50வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. கொழும்பிலிருந்து தங்களுக்கு உரிய மருந்து கிடைக்கப்பெறவில்லை என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

## வவுனியாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை!



(வவுனியா விசேட நிருபர்)

'நானே ஆரம்பம் வெல்வோம்' ஸ்ரீ லங்கா சிமாட் சூரன்களோடு' எனும் தொனிப்பொருளிலான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை வவுனியா காமினி மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு உரிய நஷ்டஈடு சம்பளம் காப்புறுதி தொடர்பான சேவைகள், ஈரிஎவ் தொடர்பான சேவைகள், தொழிற்துறை பாடநெறிகள் தொடர்பான பதிவு, தொழில் முனைவாளர்களுக்கு அபிவிருத்தி மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, உத்தேச தொழில் வாய்ப்புகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற பல சேவைகள் நடமாடும் சேவையூடாக முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் ருமேனியா, மத்திய கிழக்கு நாடுகள், இஸ்ரேல், ஐரோப்பா நாடுகளில் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக முகவர் நிறுவனங்களால் தெளிவூட்டல்களும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், அதிதிகளாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை: சந்தேகநபர்களின் தொலைபேசி உரையாடல் அறிக்கையை பெற நீதிமன்றம் அனுமதி

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் தொலைபேசி உரையாடல் அறிக்கையை பொலிஸார் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கடந்த 11ஆம் திகதி காரைநகர் பகுதியில் இளைஞனொருவன் வன்முறை கும்பலொன்றால் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதுவரையில் 09 பேரை சந்தேகத்தில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். நீதிமன்றம் சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் வழக்கு விசாரணைகள் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, 09 சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, சந்தேக நபர்களின் தொலைபேசி உரையாடல் அறிக்கையை பெற பொலிஸார் நீதிமன்றத்தில் அனுமதி கோரினர். அதற்கு நீதிமன்றம் அனுமதித்தது.






கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயத்திற்கு 120,000 மதிப்புள்ள நீர் வடிகட்டிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.ஒரு வாட்டர் ஃபில்டர் லயன் கணேஷ்வரனால் வழங்கப்பட்டதுடன் மற்ற நீர் வடிகட்டிகளை லயன் கிளப் ஆஃப் கொழும்பு சர்க்கிள் மற்றும் லயன் கே. ராசகுலசிங்கம் வழங்கினர்.

## புதுக்குடியிருப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை. இளைஞன் கைது

(ஓமந்தை விஷேட நிருபர்



புதுக்குடியிருப்பு உடையார்கட்டு குளபகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன், சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இளைஞனொருவரையும் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

## சாவகச்சேரியில் இலவச கற்கை நிலையம் திறப்பு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

தொழில்நுட்ப அறிவு கொண்ட எதிர்கால சந்ததியை உருவாக்கும் முனைப்பில் சாவகச்சேரியில் முற்றுமுழுதாக அமைக்கப்பட்ட இலவசமான 'என் கனவு' யாழ் அக்கடமி திறப்பு விழா நேற்று (29) பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி டச் வீதியில் நடைபெற்றது. திறப்பு விழா வைபவத்தில் பிரதம அதிதியாக 'என் கனவு' யாழ் அறக்கட்டளையின் ஸ்தாபகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்கை நிலையத்தை திறந்து வைத்தார். மேற்படி கற்கை நிலையம் ஊடாக முதற்கட்டமாக 1200 மாணவர்கள் பயனடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நோன்பு திறப்பு நிகழ்வு

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்.முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இஸ்லாமிய மக்களின் நோன்பு பெருநாள் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (28) மாலை மன்னித் முஹம்மதியா பள்ளிவாசல் தலைவரும் சமாதான நீதவானுமாகிய பி.எஸ்.எம் சரபுல் அனாம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ் பிரதேச செயலாளர் சா.சுதர்சன், யாழ்.மாநகர ஆணையாளர் உட்பட இஸ்லாமிய உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# மலைச்சாரல்

## இரத்தினபுரி ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிற்றூழியர்களுக்கு தட்டுப்பாடு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 17 ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிற்றூழியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட இணைப்பு குழு கூட்ட தலைவருமான அகில எல்லாவள நேற்று (29) ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் தொடர்ந்து தகவல் தருகையில், இவ்வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்காக தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வருகின்றனர்.

ஆனால் இங்கு சிற்றூழியர்கள் இல்லாத காரணத்தால் இப்பணிகளை வைத்தியர்களே செய்ய வேண்டிய பரிதாபமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கு சிற்றூழியர்கள் கடமையாற்றியுள்ள போதிலும் அவர்கள் பதவி உயர்வு பெற்று சென்றுள்ளனர்.

பதவி உயர்வு பெற்றுச் சென்றதன் பின்னர் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான பொறிமுறை இல்லாமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையினால் ஆயுர்வேத மருத்துவமனைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெருந்தோட்ட கம்பனிகள் சமர்ப்பித்த முன்மொழிவை நிராகரித்தது இ.தொ.கா



பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்திவரும் பின்புலத்தில் நேற்றுமுன்தினம் தொழிலாளர் அமைச்சின் ஊடாக பெருந்தோட்ட கம்பனிகள் சமர்ப்பித்த முன்மொழிவை கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.காவின் தலைவருமான செந்தில் தொண்டமான் கடுமையாக நிராகரித்துள்ளார்.

கூட்டு ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய பங்காளிகளும் இதே நிலைப்பாட்டை எடுத்தனர்.

"தொழில் அமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் RPC நிறுவனம் முன்மொழிந்த புதிய திட்டமானது தொழிலாளர்களை விட RPC நிறுவனத்திற்கு அதிக பயன் தரும் ஊக்கத் திட்டமாக மட்டுமே அமையும். தொழிலார்களுக்கு நாம் ஊக்க தொகையை கோரவில்லை மாறாக சம்பள உயர்வையே கோரினோம்." என இதன்போது செந்தில் தொண்டமான் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் சம்பள நிர்ணய சபையின் ஊடாக நியாயமான சம்பள உயர்வை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு செந்தில் தொண்டமான் எடுத்துரைத்தார். இதேவேளை அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுத்தர தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டுவருவதற்கு பாராட்டுகளையும் தெரிவித்தார். தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டுமென்றும் அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானத்தின் பிரகாரம் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அருள்மிகு கலைச்செல்வ விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், ஜனாதிபதி ஆலோசகர் வடிவேல் சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.





அவுஸ்திரேலியா தரிசனம் ஏற்பாட்டில் போட்டோ பிரதி இயந்திரமொன்று தெல்தொட்ட லூல்கந்துர தமிழ் வித்தியாலயத்திற்கு நேற்றுமுன்தினம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர், உப அதிபர் ஆகியோர் நினைவுச் சின்னமொன்றை வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## 'பலமும் முன்னேற்றமும்' என்ற தொனிப்பொருளில் நுவரெலியா மாவட்டத்தில் மகளிர் தின நிகழ்வுகள்



'பலமும் முன்னேற்றமும்' என்ற தொனிப்பொருளில் நுவரெலியா மாவட்ட மகளிர் தின விழா அண்மையில் நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட மற்றும் தேசிய மகளிர் பணியக பணிப்பாளர் சம்பா உபசேன தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நுவரெலியா உதவி தேர்தல் ஆணையாளர் திரு.லஹிரு கலுகம்பிட்டிய பெண்களின் அரசியல் தலைமைத்துவத்தை அதிகரிப்பது மற்றும் அவர்களை ஊக்குவித்தல் தொடர்பிலான விசேட உரையை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் கீழ் தமது இலக்குகளை எட்டிய பெண்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களின் அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டதுடன், சுகாதார சேவைகளில் பணிபுரியும் பெண்களுக்கு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# 2024 SLIM Kantar விருது நிகழ்வில் முக்கிய விருதுகளை வென்ற BOC



இலங்கை வங்கியானது அண்மையில் நடைபெற்ற "SLIM Kantar மக்களின் வங்கிச் சேவை வழங்குநர் விருதுகள் 2024" நிகழ்வில் 'ஆண்டின் சிறந்த வங்கிச் சேவை வழங்குநர்' என்ற மகத்தான மக்கள் விருதை வென்றுள்ளது.

இம்மக்கள் விருதுகள் 2007ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருவதோடு வங்கித்துறையில் மிகவும் எதிர்பார்க்கப்படும் விருதாகவும் விளங்குகிறது. இலங்கை சந்தைப்படுத்துனர் நிறுவனத்தால் (SLIM) பரந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நாட்டு மக்களுடன் இரண்டறக் கலந்துள்ள வணிக நிறுவனம் எது என்ற அடிப்படையில் வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவதே இவ்விருதின் சிறப்பம்சமாகும். இது வாடிக்கையாளரின்/சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஒரு வணிக நிறுவனம் கொண்டுள்ள வலிமையைக் குறிக்கிறது. இலங்கை சந்தைப்படுத்துனர் நிறுவனத்தின் சார்பாக உலகளாவிய ஆய்வு நிறுவனமான Kantar இலங்கை முழுவதுக்குமான மாபெரும் சுயாதீன ஆய்வொன்றைநடாத்திவெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வங்கியானது 84 ஆண்டுகளுக்கும் மேலாக அனைத்து இலங்கையர்களுக்கும் பெருநிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் ஒரு முக்கிய நிதிப் பங்காளராக இருந்து வருகிறது. இலங்கைக்குள் 2000 இற்கும் மேற்பட்ட பௌதீகச் சேவை நிலையங்களையும் 1350இற்கும் மேற்பட்ட ATM, CDM இயந்திரங்களையும் கொண்டுள்ள இலங்கை வங்கி லண்டனில் உள்ள முழுநேர துணை வங்கி நிறுவனத்தையும் சென்னை, மாலே முதலான நகரங்களில் நான்கு வெளிநாட்டுக் கிளைகளையும் கொண்டுள்ளது.

# உலக கண் பரிசோதனை வாரத்தில் முதற்கட்ட கண் பரிசோதனை தொகுதியை வழங்கிய விஷன் கெயார்




உலக கண் பரிசோதனை வாரத்தை முன்னிட்டு விஷன் கெயார் நிறுவனம் "விசன் கொயர் கண் பரிசோதனை மற்றும் அறிவூட்டல் உபகரணத் தொகுதியை நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்துள்ளது. இந்த செயற்பாடானது பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறை அமைப்புகள் மத்தியில் கண் சுகாதார விழிப்புணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வு கொழும்பு 02, விஷன் கொயர் நிறுவனத்தில் நடைபெற்றதுடன் ஆரம்ப நிகழ்வில் 100 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கென வடிவமைக்கப்பட்ட "விஷன் கெயார் அறிவூட்டல் கட்டளைத் தொகுதி பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த உபகரணத் தொகுதியில் முழுமையான கண் பரிசோதனைக் கருவிகள், அறிவூட்டல் சாதனங்கள் மற்றும் பாடசாலை மட்டத்தில் செயற்திறன் மிக்க கண் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் உட்பட அத்தியாவசியமான அகங்களைக் கொண்ட விசேட கட்டளைத் தொகுதி வழங்கப்பட்டது. இங்கு கருத்து தெரிவித்த இலங்கை கண் மருத்துவர்கள் கல்லூரியின் தலைவர் டாக்டர் அமில டி அல்விஸ், இந்த சுகாதார தேவை அதிகரிப்பதால் கண்பார்வை சோதனைக் கல்வி மற்றும் தொழில்முறை பயிற்சி என்பவற்றிற்கு முன்னுரிமை அளிப்பது அவசியமாகும். கண் பரிசோதனை நிபுணர்களுக்கு தேவையான திறன்கள் மற்றும் அறிவினை வழங்கி வலுவூட்டுவதன் மூலம் அவசியமானவருக்கு தீர்வினை வழங்குவதை உறுதி செய்ய முடியுமென தெரிவித்தார்.

கண் அழுத்த நோய் மற்றும் நீரிழிவு போன்ற நிலைமைகளின் போது கண் பரிசோதனைகளை மேற்கொள்வது முன்கூட்டியே நோயறிந்து உரிய நேரத்திலான சிகிச்சை பெற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். இங்கு உரையாற்றிய விஷன் கெயார் நிறுவனத்தின் பொது முகாமையாளர், நல்வாழ்வுக்கு கண் நலன் அடிப்படையானது. இந்த திட்டம் ஊடாக சமூகங்களுக்கு வலுவூட்ட நாம் முயற்சிப்பதோடு அதனை இளைய தலைமுறையுடன் ஆரம்பிப்பதற்கு முயற்சிப்பதாக கூறினார்.




# OrphanCare உடன் உலக நீர் தினத்தை அர்த்தமாக்கிய American Premium



இலங்கையின் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் விற்பனையில் முன்னோடியாக திகழும் American Premium Water Systems, இலங்கையர்களின் தாகத்தை தீர்க்கும் தூய்மையான, சுகாதாரமான நீராகவும் அமைந்துள்ளது. சர்வதேச நீர் தினத்தை உலகம் அனுஷ்டித்திருந்த நிலையில், கூட்டாண்மை சமூகப்பொறுப்புணர்வுக்கான American Water இன் அர்ப்பணிப்பு, சுயாதீன காப்பகமான OrphanCare உடன் அவர்கள் கைகோர்த்திருந்ததனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அநாதரவான சிறுவர்கள் காப்பகத்திலிருந்து பராயமடைந்தவர்களாக வெளியேறும் போது அவர்களின் வாழ்க்கையில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்துவதில் இந்த காப்பகம் கவனம் செலுத்துகின்றது. இந்தப் பங்காண்மையின் அங்கமாக, American Premium Water Systems இனால் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு 19 லீற்றர் குடிநீர் போத்தல்களிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை இந்த காப்பகத்திலுள்ள அநாதரவான சிறுவர்களின் எதிர்காலத்துக்காக பங்களிப்புச் செய்யப்படவுள்ளது.

2019 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட OrphanCare இனூடாக, அநாதரவான சிறுவர்கள் 18 வயதை எய்தியதும், காப்பகத்தின் பராமரிப்பிலிருந்து வெளியே செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவும் வகையில் இது அமைகிறது.

American Premium Water Systems இன் குழும முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எச்.எம் பசால் கருத்துத் தெரிவிக்கையில், "OrphanCare நிதியத்துடனான எமது பங்காண்மையினூடாக, ஒவ்வொரு போத்தலின் விற்பனையினூடாக கிடைக்கும் வருமதியின் ஒரு பகுதி, அநாதரவாக்கப்பட்ட சிறுவர்கள் தமது வாழ்வில் இரண்டாவது முறையாகவும் அநாதரவாக்கப்படுவதை தவிர்ப்பதற்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றார்.

OrphanCare இன் தலைமை அதிகாரி அசாத் சஹீத் கருத்துத் தெரிவிக்கையில், "OrphanCare இல் எமது நோக்கம் என்பது, அநாதரவான சிறுவர்களுக்கு தமக்கென சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஆதரவையும், வளங்களையும் வழங்குவதாகும். எமது பங்காளராக இணைந்து கொள்வதற்கு முன்வந்தமைக்காக American Premium Water க்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்" என்றார்.

# 'தீவா கரத்திற்கு வலிமை': திட்டத்தின் வெற்றியாளர்கள் காலியில் கௌரவிப்பு

20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையின் பெருமைக்குரிய வர்த்தக நாமமான தீவா (DIVA), 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில்முயற்சியாண்மைத் திறன் விருத்தி நிகழ்வில் சிறந்து விளங்கிய வெற்றியாளர்களுக்கு காலியில் விருது வழங்கி கௌரவித்தது. Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது. மிகக் கவனமான மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றின் பின்னரே குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச் சிறந்து விளங்கிய நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு அனைவரும் முகங்கொடுத்துவரும் நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களில் ஈடுபடும் தொழில்முனைவோர், நாட்டின் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி நாட்டை பொருளாதார வளர்ச்சியை நோக்கி வழிநடத்தும் சக்தியாக உருவெடுத்துள்ளனர். எமது இல்லத்தரசிகளும் தமது வீட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியவாறே தொழில்முனைவோர்களாக உருமாறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. தொழில் நேர்த்தி முதலான இவர்களது பல்வேறுபட்ட திறமைகள் தொழில் முயற்சியாண்மைத் துறைக்குள் நுழைவதற்கான பலத்தை அவர்களுக்கு வழங்கியிருப்பதோடு அதன்மூலம் குடும்பத்தின் பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வல்லமையையும் வழங்கியுள்ளது.

பெண் தொழில் முனைவோரின் இவ்வாறான அசாத்திய திறமைகளை இனங்கண்டு அவர்களின் வியாபார தொழில் நுணுக்கங்கள், திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றைப் பட்டை தீட்டி ஆகச்சிறந்த வழிகாட்டல்களை வழங்குவதனை தலையாய நோக்கமாகக் கொண்டு 'தீவா கரத்திறகு வலிமை' என்னும் தொழில் முயற்சிசார் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

# சிறந்த பல் துலக்கும் அனுபவத்திற்காக Clogard Pro Clean பற்தூரிகை அறிமுகம்



வாய்ச் சுகாதார பராமரிப்பில் நம்பகமான பெயராக விளங்கும் க்ளோகார்ட், தனது சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்பான Clogard Pro Clean Toothbrush பற்தூரிகையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது. க்ளோகார்ட் பற்தூரிகை குடும்பத்தில் புதிதாக இணையும் இந்த புதிய உயர் ரக தூரிகையின் இணைவானது, வாய்ச் சுகாதார பராமரிப்பில் Hemas Consumer Brands புரட்சியை ஏற்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. Pro Clean Toothbrush ஆனது, வாய்ச் சுகாதாரத்தில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

தனது போட்டியாளர்களை விட அதிகமான அம்சங்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இது, மேம்பட்ட பல் துலக்கும் அனுபவத்தை மீள்வரையறை செய்யும் அம்சங்களை அறிமுகப்படுத்துகிறது.

Pro Clean Toothbrush இன் தனித்துவமான அம்சம் யாதெனில் அதிலுள்ள பிரத்தியேகமான Power Tip (சிறிய வளைந்த முனை) ஆகும். இது முழுமையான மற்றும் பயனுள்ள பல் துலக்கும் அனுபவத்தை வழங்கும் வகையில், வாயில் இலகுவில் அடைய முடியாத பகுதிகளை அடைந்து, தூய்மைப்படுத்துவதற்கு உதவுகிறது. Hemas Consumer Brands சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர் ரொசெல் பெரேரா இது குறித்து தெரிவிக்கையில், "நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட Clogard Pro Clean Toothbrush ஆனது, எமது நுகர்வோரின் மாறுபட்ட தெரிவுகளை பூர்த்தி செய்யும் வகையில் பல மேம்பட்ட அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது பயனுள்ள வகையிலான பல் துலக்கும் செயற்பாட்டை எளிதாக்குவதோடு மட்டுமல்லாமல், வசதி மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்காக, பிடிப்பதற்கு இலகுவான கைப்பிடி பகுதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் சிறிய வளைந்த முனைப் பகுதியான Power Tip ஆனது, இப்பல் தூரிகையை அதன் போட்டியாளர்களிடமிருந்து தனித்துமாக வேறுபடுத்துகிறது." என்றார்.

# ஆங்கில பரீட்சைக்கான தொகுதியை அறிமுகம் செய்துள்ள Pearson



இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கானவர்கள், குறிப்பாக இளம் வயதினர் தொழில்வாய்ப்புக்களைத் தேடியும், சிறந்த வாய்ப்புக்களை நாடியும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதில் கவனம் செலுத்தியுள்ளனர். 2022 ஆம் ஆண்டின் முடிவில் 300,000 க்கும் மேற்பட்டவர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதுடன், அவர்களில் பலரும் முறைசார் தொழில் தகைமை உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் தங்களுடைய குடும்பங்களுக்காக உழைக்கும் வழிகளைத் தேடுகின்றார்கள். எனினும், புலம்பெயர்கின்றவர்கள் முகங்கொடுக்கின்ற ஒரு முக்கியமான தடையாக ஆங்கில மொழி தேர்ச்சி மதிப்பீடு காணப்படுவதுடன், கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பல பிரபலமான நாடுகளுக்கு புலம்பெயர்வதற்கு இது மிகவும் முக்கியமான ஒரு தேவைப்பாடாக உள்ளது. இதன் பின்னணியில், Pearson இன் ஆங்கில பரீட்சைகளுக்கான PTE தொகுதியானது இந்த இளைஞர்களும்,யுவதிகளும் வெளிநாடுகளில் தமது கனவுகளை நனவாக்குவதற்கு உதவுகின்றது. 2023 ஆம் ஆண்டில் கனடாவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கு இலங்கையிலிருந்து 3,200 க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளதுடன், அவற்றுள் 84% வீதமானோர் அதற்குத் தேவையான அனுமதியைப் பெற்றுள்ளமை அபிலாஷை கொண்ட இலங்கை மக்களுக்கு அங்கு செல்வதற்கான சிறந்த வாய்ப்புக்கள் உள்ளதை காண்பிக்கின்றது.

இந்த வகையில், கல்விச் சேவைகளில் சர்வதேச பெருநிறுவனமான Pearson, இலங்கையில் PTE Core இனை அறிமுகம் செய்துள்ளதுடன், இலங்கையில் ஆங்கில மொழி தேர்ச்சி மதிப்பீட்டைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கியமான சாதனை இலக்காக மாறியுள்ளது.

பரீட்சைகளுக்கான Pearson Test of English (PTE) தொகுதியில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள PTE Core ஆனது வெளிநாட்டில் கல்வி கற்பதற்கும், தொழில் புரிவதற்கும் மற்றும் புலம்பெயர்வதற்கான வாய்ப்புக்களுக்கும் வழிவகுப்பதுடன், குறிப்பாக கனடா நாட்டுக்கு செல்வதற்கு இது பெரிதும் உதவுகின்றது.

# உயர்ந்த எரிபொருள் மின் கட்டணங்களை ஈடு செய்யும் மன்னார் காற்றாலை மின் திட்டம்

மன்னார் 250 MW காற்றாலை மின்னுற்பத்தித் திட்டமானது நாட்டின் மிகப் பெரிய பசுமை வலுசக்தி காற்றாலை திட்டங்களில் ஒன்றாகும். இது மிக நவீன காற்றாலை தொகுதிகளைக் கொண்டுள்ளதோடு, இதுவரை இல்லாத அளவில் கரையோரத்தில் தலா 5.2 MW கொள்ளவுத் திறன் கொண்டதும், தரைப் பகுதியில் குறைந்த காபன் வெளியீட்டைக் கொண்டதும், அதிக உற்பத்தி, அதிக நம்பகத்தன்மை, குறைந்த பராமரிப்புத் தேவை, குறைந்த சத்தம் கொண்ட திட்டமாகும். இதன் மூலமான மொத்த 484MW கொள்ளளவுத் திறன் மூலம், 60 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான எரிபொருள் செலவின் அடிப்படையிலான கட்டணங்களை மாற்றியமைக்கப்பட்டு, மின்சக்தி நிலைபேறான தன்மையை மேம்படுத்துவதன் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்குமான கூட்டுச் சேமிப்பாக அமைகிறது.

மன்னார் மின்னுற்பத்தித் திட்டமானது, இலங்கைக்கு நன்மை பயக்கும் என அதானி குழுமம் உறுதியாக நம்புகிறது. போட்டி விலையில் பசுமை வலுசக்தியை வழங்கி, 2050 ஆம் ஆண்டளவில் மின்சக்தித் தேவையை 100% புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் உற்பத்தி செய்யும் நாட்டின் அர்ப்பணிப்புக்கு உதவுகிறது. இந்தத் திட்டமானது, நாட்டில் காணப்படும் மிகக் குறைந்த காற்றாலை மின்னுற்பத்திக் கட்டணத்தை முன்மொழிந்துள்ளதோடு, நுகர்வோருக்கு அதிக நன்மையளிக்கிறது.

அதானி சார்பில் அதன் பேச்சாளர் ஒருவர் இது தொடர்பில் தெரிவிக்கையில், "இத்திட்டத்திற்கான இடம் மிகக் கவனமாக பரிசீலிக்கப்பட்ட பினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதோடு, முக்கியமாக இடம்பெயரும் பறவைகளின் பாதைகள் அல்லது உணர்திறன் மிக்க அதன் வாழ்விடங்களில் காற்றாலைத் தொகுதிகள் அமைக்கப்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் பறவைகள் மற்றும் வௌவால்கள் ஆய்வுகள் உள்ளிட்ட சூழல் பாதிப்பு மதிப்பீடு (EIA) ஆய்வானது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சூழல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியரும் இத்துறையில் புகழ்பெற்ற தேவக வீரகோன் தலைமையில், இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபையால் (SLSEA) மேற்கொள்ளப்பட்டது." என்றார்.

# ICBT – Sunderland பழைய மாணவர் சந்திப்பு 2024



இலங்கையின் உயர் கல்வி கட்டமைப்பில், நீண்டகாலமாக தலைமையை வகிக்கும் ICBT கெம்பஸானது, அதனது University of Sunderland இன் வருடாந்த பழைய மாணவர் கூட்டத்தை கொழும்பு கிங்க்ஸ்பெரி ஹோட்டலில் பெருமையுடன் நடாத்தியது. ஐக்கிய இராச்சியத்தின் மதிப்பிற்குரிய University of Sunderland இன் பிரதிநிதியாக இரு தசாப்தங்களிற்கும் மேலாக சேவையாற்றும், ICBT கெம்பஸானது, இந்நன்கறியப்பட்ட ஐக்கிய இராச்சிய நிறுவகத்திலிருந்து தரமான உயர் கல்வியை பெற்றுக்கொண்ட பல்லாயிரக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு அடித்தளமாக விளங்கியது.

சமீபத்தில் நிறைவுபெற்ற பழைய மாணவர் சந்திப்பானது பட்டாதரிகளிற்கு மீளவும் தொடர்புரவும், அவர்களது பகிரப்பட்ட அனுபவங்களை கொண்டாடவும், மற்றும் வலுவான வலையமைப்பினை பேணவுமாக துடிப்பானதொரு மேடையை அமைத்துத்தந்தது. இப்பழைய மாணவர்களில் பலர் இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலுமான நிறுவனங்களில் செல்வாக்குமிக்க பதவிகளை வகிப்பதானது, பன்முகப்பட்ட கற்கை நெறிகளுடனான ICBT Sunderland பங்குடைமையின் வெற்றியை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

இம்மாபெரும் களியாட்டமானது 100 இற்கும் மேற்பட்ட ICBT – Sunderland பழைய மாணவர்களது பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது.

# திறன்கள் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர இலங்கையர்களுக்கு வாய்ப்புகள்



திறன் மற்றும் முதலீட்டின் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு இலங்கையர்கள் குடிபெயர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், அதற்காக அவர்கள் நிபுணத்துவ அறிவுடன் சரியான ஆலோசனை சேவைகளைப் பயன்படுத்த வேண்டுமெனவும் சட்டத்தரணி சுசந்த கட்டுகம்பொல தெரிவிக்கின்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவதும், இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவுக்கு சரியான முறையிலும், சட்டபூர்வமாக இடம்பெயர்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதும் எமது அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

அந்த நோக்கத்திற்காக, Australia Gateway நிறுவனம் மற்றும் Fairfield சட்டத்தரணிகள் குழு இணைந்து இலங்கையர்களுக்கு சரியான வழிகாட்டல்களை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். Fairfield சட்டக் குழு அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. அத்துடன் இலங்கையில் கொழும்பு, அப்துல் கபூர் மாவத்தையிலும் அதன் ஒரு கிளை உள்ளது. இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் வாழும் புலம்பெயர்வோருக்கு நாம் எமது சேவைகளை வழங்கி வருகிறோம்.

அவுஸ்திரேலியாவிற்கு இடம்பெயர்வதற்கான சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாக திறன் மூலமான இடம்பெயர்வுகளை சுட்டிக்காட்டலாம். அதற்கு தொழில் தகைமைகள், கல்வி மற்றும் ஆங்கில அறிவு ஆகியன முக்கியமாகும் என்பதுடன், அவ்வாறான தகைமைகள் கொண்டவர்கள் அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிடத்தையும் குடியுரிமையையும் பெறலாம்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 மார்ச் 30 சனிக்கிழமை




பங்களாதேஷுடனான இரண்டாவது டெஸ்ட்

# தொடரை வெல்லும் எதிர்பார்ப்புடன் இலங்கை அணி இன்று களத்தில்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சட்டொக்ராம், சஹூர் அஹமது சவுதுரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டியில் முழுமையாக ஆதிக்கம் செலுத்தி 328 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி இந்தப் போட்டியை சமநிலை செய்தாலே தொடரை கைப்பற்றி விடும். எனினும் முதல் டெஸ்டில் பந்துவீச்சில் சோபித்த கசுன் ராஜித்த முதுகுப் பகுதியில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இன்றைய போட்டியில் களமிறங்காதது பெரும் பின்னடைவாகும்.

ராஜித்தவுக்கு பதில் அணியில் வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.



இலங்கை அணி முதல் டெஸ்டில் மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கிய நிலையில் வேகப்பந்துக்கு சாதகமான அந்த ஆடு களத்தில் பங்களாதேஷ் அணியில் 20 விக்கெட்டுகளையும் அந்த மூன்று வீரர்களும் வீழ்த்தி இருந்தனர்.

இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் போட்டியிலும் ஆடுகளம் ஒத்துழைத்தால் அதே உத்தியை பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அசித்த அணிக்கு அழைக்கப்படலாம்.

துடுப்பாட்டத்தில் முதல் டெஸ்டில் அனுபவ வீரர்கள் கைகொடுக்காத சூழலில் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா மற்றும் கமிந்து மெண்டிஸ் இருவருமே இரண்டு இன்னிங்ஸ்களிலும் சோபித்தனர். இந்நிலையில், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் திமுத் கருணாரத்ன ஆகிய அனுபவ வீரர்கள் தமது வழக்கமான ஆட்டத்திற்கு திரும்பினால் இலங்கைக்கு மேலும் பலம் சேர்க்கும்.

மறுபுறம் முதல் டெஸ்டில் பங்களாதேஷ் அணி அனைத்து துறையிலும் தடுமாற்றம் கண்ட நிலையில் இரண்டாவது டெஸ்டுக்கு அனுபவ சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹசன் அழைக்கப்பட்டிருப்பது அந்த அணிக்கு நம்பிக்கை தருவதாக உள்ளது.

எனினும் கண்ணில் பிரச்சினை காரணமாக முன்னர் நடந்த டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் இடம்பெறாத நிலையிலேயே அவர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். மற்றது அவர் அண்மைக் காலத்தில் டெஸ்ட் போட்டிகளில் இடம்பெறாமல் இருந்து வந்தார். கடைசியாக அவர் கடந்த ஆண்டு ஏப்ரலில் மிர்பூரில் நடந்த அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலேயே பங்கேற்றிருந்தார். முதல் தர கிரிக்கெட்டிலும் அவர் நீண்ட கிரிக்கெட்டில் அண்மைக் காலமாக ஆடியதில்லை.

'எம்மால் வெற்றிபெற முடியும் என்று எப்போதும் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். நாம் எப்போது டெஸ்டில் தடுமாற்றம் காண்கிறோம், எமக்கு அது கடினமானது. ஆனால் இலங்கைக்கு எதிராக நாம் சிறந்த முறையில் ஆட வேண்டும் என்று நான் நம்புவதோடு அவர்களுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற வேண்டும்' என்று பங்களாதேஷ் டெஸ்ட் குழாத்தில் இணைவதற்கு முன்னர் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்தபோது ஷகீப் குறிப்பிட்டிருந்தார்.

சட்டொக்ராம் மைதானத்தில் டெஸ்ட் போட்டி ஒன்று நடைபெறுவது 2022 ஆம் ஆண்டுக்குப் பின் இது முதல் முறையாகும். இங்கு மொத்தம் 23 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றிருப்பதோடு பங்களாதேஷ் இங்கு கடைசியாக வெற்றி பெற்றது 2018 இல் ஆகும்.

ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருந்தபோதும் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்த முடியும். கடந்த ஐந்து போட்டிகளிலும் முதல் இன்னிங்ஸின் சராசரி ஓட்டம் 381 என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலத்திலிருந்து பஸ் விழுந்து 45 பேர் பலி



தென்னாபிரிக்காவில் பஸ் வண்டி ஒன்று பாலத்தில் இருந்து 165 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் நற்பத்து ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிர் தப்பிய ஒரே ஒருவரான எட்டு வயது சிறுமி படு காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடகிழக்கு லிம்போபோ மாகாணத்தில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற இந்த விபத்தில் தடுப்பையும் உடைத்துக் கொண்டு கீழே விழுந்த பஸ் வண்டி தீப்பிடித்துள்ளது. இதில் பொட்ஸ்வானா தலைநகர் கபொரோனில் இருந்து உயிர்த்த ஞாயிறு ஆராதனைக்காக மோரியோ நகருக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த பயணிகளே பஸ் வண்டியில் இருந்துள்ளனர்.

ஜொஹன்னஸ்பேர்க்கின் வடக்காக சுமார் 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மொகோபான் மற்றும் மார்கன் இடையிலான மலையின் மீது உள்ள பாலம் ஒன்றில் பயணிக்கும் போதே இந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்திருப்பதாக தென்னாபிரிக்க வானொலி குறிப்பிட்டுள்ளது.

மீட்பு நடவடிக்கைகள் வியாழன் இரவு வரை இடம்பெற்றதோடு உயிரிழந்த சிலரது உடல்களை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. சில சடலங்கள் அடையாளம் தெரியாத அளவிற்கு எரிந்துபோயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## சர்வதேச செய்திகள்

### வட கொரியாவை கண்காணிக்கும் நடவடிக்கையை தடுத்தது ரஷ்யா

வட கொரியா மீதான சர்வதேச தடையை கண்காணிக்கும் ஐ.நா கண்காணிப்புக் குழுவை புதுப்பிப்பதற்கு எதிராக ரஷ்யா பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியது. உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்கு ரஷ்யாவுக்கு வட கொரியா ஆயுதங்கள் வழங்குவதாக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் நாடுகள் குற்றம்சாட்டிய நிலையிலேயே ரஷ்யா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.



வட கொரியாவின் அணு ஆயுதங்கள் மற்றும் பலிஸ்டிக் ஏவுகணை திட்டங்கள் மீதான ஐ.நா தடை கடைப்பிடிக்கப்படுவது தொடர்பில் இந்தக் குழு சுமார் 20 ஆண்டுகளாக கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தது. ஆயுதப் பரிமாற்றங்கள் குறித்து இந்தக் குழு இந்த மாதத்தில் விசாரணைகளை நடத்தி வந்தது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் சீனா வாக்களிப்பதை தவிர்த்துக் கொண்டதோடு ஐ.நா பாதுகாப்புச் சபையில் எஞ்சிய 13 அங்கத்துவ நாடுகளும் ஆதரவாக வாக்களித்தன.

### இருதரப்பு உறவை வலுப்படுத்த இந்தியா – பெல்ஜியம் அவதானம்



பெல்ஜியமும் இந்தியாவும் பல்வேறு துறைகளிலும் இரு தரப்பு நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளன. இது தொடர்பில் பெல்ஜியப் பிரதமர் அலெக்சாண்டர் டி குரூவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் கலந்துரையாடியுள்ளனர்.

பெல்ஜியம் அதன் முதலாவது அணுசக்தி உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தியுள்ளதையொட்டி இந்தியப் பிரதமர் அந்நாட்டு பிரதமரைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து இருபக்க நட்புறவை மேலும் மேம்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையை தற்போது பெல்ஜியம் வகிக்கிறது. இக்காலப்பகுதியில் இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான மூலோபாயக் கூட்டாண்மையை மேலும் மேம்படுத்துவதற்கும் இரு தலைவர்களும் தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிராந்திய மற்றும் உலகளாவிய நெருக்கடிகள் குறித்தும் இச்சமயம் இந்திய மற்றும் பெல்ஜியப் பிரதமர்கள் கருத்து பரிமாறிக்கொண்டனர்.

# காசாவுக்கான உதவிகளை அனுமதிப்பதற்கு சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவு

காசாவில் ஆறு மாதங்களாக நீடிக்கும் போரினால் அங்கு ஏற்கனவே பஞ்சம் ஏற்படும் அச்சுறுத்தல் நெருங்கியுள்ள சூழலில் காசா மக்களுக்கு மேலும் உணவு மற்றும் அவசர மனிதாபிமான உதவிகள் செல்வதை உறுதி செய்யும்படி சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவிட்டுள்ளது.

முற்றுகையில் உள்ள காசாவுக்கு உதவிகள் செல்வதை இஸ்ரேல் தடுத்து, பட்டினி அளவு அதிகரித்துள்ள நிலையில் அங்கு மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சம் ஒன்று ஏற்படும் அச்சுறுத்தல் பற்றி ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து எச்சரித்து வரும் சூழலிலேயே சர்வதேச நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

'காசாவில் உள்ள பலஸ்தீனர்கள் தொடர்ந்து பஞ்ச அச்சுறுத்தலை எதிர்கொள்வது மாத்திரம் அன்று அதனை அனுபவிக்கின்றனர்' என்று ஹேகை தளமாகக் கொண்ட ஐ.நா நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

'எந்த தாமதமும் இன்றி அவசர தேவையாக உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் மனிதாபிமான உதவிகள் செல்வதை உறுதி செய்வதற்கு தேவையான பயனுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்' என்று அந்த நீதிமன்றம் இஸ்ரேலை கூறியது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து காசாவுக்கான உணவு, நீர் மற்றும் மருந்துகளை முடக்கி முழுமையான முற்றுகையை இஸ்ரேல் அமுல்படுத்தியது. பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகங்களுக்கு மத்திரம் அனுமதி அளிக்கப்பட்டது.



அவ்வப்போது உதவி வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டபோதும் அது போதுமானதாக இல்லை என்று மனிதாபிமானக் குழுக்கள் கூறுகின்றன. இஸ்ரேலின் இந்தக் கட்டுப்பாடு போரின் ஆயுதம் ஒன்றாக பட்டினியை பயன்படுத்துவதாக உள்ளது என்று ஐ.நா மனித உரிமைகள் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாரத்தில் வானில் இருந்து வீசப்பட்ட உதவிகள் கடலில் விழுந்ததை அடுத்து அதனை பெற முயன்ற பலர் நீரில் மூழ்கி உயிரிழந்தது மற்றும் மேலும் பலர் நெரிசலில் சிக்கி உயிரிழந்த சம்பவங்கள் அங்குள்ள மோசமான நிலையை காட்டுவதாக உள்ளன.

'உலகில் வேறு எங்கும் இவ்வளவு மக்கள் உடனடி பஞ்சத்தை எதிர்கொள்ளவில்லை'என்றுஉலகஉணவுத் திட்டத்தின் பலஸ்தீன பணிப்பாளர் மத்தியு ஹொலிங்வேர்த் தெரிவித்துள்ளார்.

காசாவில் சுத்தமான நீருக்கும் கடும் பற்றாக்குறை நீடிப்பதோடு மக்கள் நீரை பெறும் முயற்சியாக நீண்ட தூரம் பயணித்து வருகிறார்கள். 'எல்லாவற்றுக்கும் நாம் வரிசையில் காத்திருக்கிறோம்' என்று மரம் அபூ அம்ரா என்பவர் குறிப்பிட்டார். 'மொத்தம் ஒரு மணி நேரம் அளவுக்கு நாம் நடக்கிறோம். சில நேரங்களில், நீரின்றி வெறுங்கைகளுடன் திரும்புகிறோம்' என்றும் அவர் தெரித்தார்.

**உயிரிழப்பு 32,623 ஆக உயர்வு**

காசாவில் உடனடி போர் நிறுத்தம் ஒன்றுக்கு பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியபோதும் அங்கு தொடர்ந்து மோதல் நீடிப்பதோடு இஸ்ரேலின் தாக்குதல்கள் அதே தீவிரத்தில் உள்ளன.

தெற்கு காசாவின் ரபா நகரில் உள்ள ஹாவி அல் நாசிர் பகுதியில் குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது நேற்று இடம்பெற்ற வான் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

வடக்கின் அல் ஜபலியாவில் உள்ள சாத் பின் அபி வக்காஸ் பள்ளிவாசல் மீது இஸ்ரேலிய போர் விமானம் நடத்திய குண்டு வீச்சில் ஒரு பெண் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

காசா நகரின் கிழக்காக அமைந்திருக்கும் அல் ஷுஜையா விளையாட்டு கழக வளவை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய செல் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாக வபா குறிப்பிட்டது.

இந்தப் போர் காசாவில் பெரும்பகுதியை கட்டட இடிபாடுகளாக மாற்றி இருப்பதோடு அங்குள்ள சுகாதார கட்டமைப்பு செயலிழந்துள்ளது. காசாவின் மூன்று பிரதான மருத்துவமனைகள் மீதான இஸ்ரேல் இராணுவத்தின் முற்றுகை நீடித்து வருவதோடு அங்கு பலஸ்தீன போராளிகள் மறைந்திருப்பதாக இஸ்ரேல் சுமத்தும் குற்றச்சாட்டை அந்தப் போராளிகள் மறுத்து வருகின்றனர்.


தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் இருக்கும் அல் அமல் மருத்துவமனைக்கு அருகில் சுற்றிவளைப்புகளை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று அந்த நகரில் இருக்கும் மற்றொரு மருத்துவமனையான நாசிர் மருத்துவமனையை இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் சுற்றிவளைத்துள்ளன. எனினும் அங்கு இன்னும் முழு அளவிலான சுற்றிவளைப்பு ஒன்று இடம்பெறவில்லை என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மறுபுறம் காசா நகரில் இருக்கும் அல் ஷிபா மருத்துவமனையில் கடும் மோதல் நீடித்து வருகிறது. கடந்த வார ஆரம்பம் தொடக்கம் இங்கு சுமார் 200 போராளிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியபோதும் மருத்துவமனையைச் சூழவிருக்கும் குடியிருப்பு பகுதிகள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அல் ரிமால் பகுதியில் உள்ள கட்டடங்கள் மற்றும் வீடுகள் அனைத்திலும் இஸ்ரேலிய ஊடுருவல் ஆரம்பித்ததை அடுத்து அங்கிருந்து தப்பி வந்ததாக 63 வயது அபெத் ரத்வான் குறிப்பிட்டார். இதன்போது பலரும் கைது செய்யப்பட்டதோடு எஞ்சியவர்கள் தெற்கை நோக்கி வளியேற ஆரம்பித்ததாக ஏ.எப்.பி. செய்தி நிறுவத்திற்கு அவர் குறிப்பிட்டுள்ளார்.

'நான் அவர்களுடன் நடந்தேன். வீதிகளில் அழுகிய உடல்கள் சிதறி இருப்பதை நான் கண்டதோடு பல வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. அவர்கள் எதனையும் மிச்சம் வைக்கவில்லை அனைத்தையும் அழித்துவிட்டார்கள்' என்று ரத்வான் கூறினார். காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்தி தாக்குதல்களில் 71 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு மேலும் 112 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. சுமார் கடந்த ஆறு மாதமாக இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 32,623 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 75,092 பேர் காயமடைந்துள்ளனர்.

### இஸ்ரேலின் வான் தாக்குதலில் சிரியாவில் 42 பேர் உயிரிழப்பு



சிரியாவின் வட கிழக்கு மாகாணமான அலெப்போ மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 40க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதோடு அதில் பெரும்பாலானவர்கள் இராணுவ வீரர்கள் என்று செய்தி நிறுவனங்கள் மற்றும் போர் கண்காணிப்புக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

இதில் லெபனான் போராட்டக் குழுவான ஹிஸ்புல்லா அமைப்பின் ஆறு உறுப்பினர்களும் கொல்லப்பட்டிருப்பதோடு உயிரிழப்பு எண்ணிக்கை 42 ஆக உயர்ந்திருப்பதாக பிரிட்டனை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மேலும் பலர் காயமடைந்துள்ளனர். அலெப்போவில் பல இடங்களையும் இலக்கு வைத்து நேற்று (29) அதிகாலையில் தாக்குதல்கள் இடம்பெற்றதாக சிரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அலெப்போ சர்வதேச விமானநிலையத்திற்கு அருகிலுள்ள ஆயுதக் கிடங்கு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பாரிய வெடிப்புகள் நிகழ்ந்ததாக போர் கண்காணிப்புக் குழு ஒன்று எக்ஸ் சமூகதளத்தில் பதிவிட்டுள்ளது.

எனினும் இந்தத் தாக்குதல்கள் குறித்து இஸ்ரேல் உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.